டார்ட்ரெச்சின் நியதிகள் (சட்டங்கள்)
---------------------------------------
தலைப்பு 1: தெய்வீக முன்குறிப்பு.

கட்டுரை 1
எல்லா மனிதர்களும் ஆதாமில்/ஆதாமிற்குள் பாவம் செய்து, சாபத்தில் மூழ்கி, நித்திய மரணத்திற்கு தகுதியானவர்களாக இருப்பதால், அவர்கள் அனைவரையும் அழிவில் விட்டுவிட்டு, பாவத்தின் நிமித்தம் உண்டான தண்டனைக்கு/கண்டணத்திற்கு ஒப்புக்கொடுத்ததின் மூலம் கடவுள் எந்தவொரு அநீதியையும் செய்யவில்லை. " மேலும், வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும்...(ரோமர் 3:19) " எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி " (ரோமர் 3:23) மற்றும் " பாவத்தின் சம்பளம் மரணம் "(ரோமர் 6:23) என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகள் தெளிவுபடுத்துகின்றன.

கட்டுரை 2
தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளியதன் மூலம் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.  யோவான் 3:16, I யோவான் 4:9

கட்டுரை 3
மேலும், மனிதர்கள் விசுவாசிக்கும்படிக்கு மிகவும் மகிழ்ச்சியான இந்தச் செய்திகளை அறிவிக்க கடவுள் இரக்கத்துடன் தூதர்களை/ஊழியக்காரர்களை அனுப்புகிறார். அவர் விரும்பும் மனிதர்களை அவர் விரும்பும் நேரத்தில், அவர் விரும்பும் ஊழியக்காரரின் ஊழியத்தின் மூலமாக மனந்திரும்புதலுக்கும் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை விசுவாசிக்கும்படிக்கும்  அழைக்கப்படுகிறார்கள். "அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்?" (ரோமர் 10:14-15)

கட்டுரை 4
இந்த நற்செய்தியை நம்பாதவர்கள்/விசுவாசியாதவர்கள் மீது கடவுளின் கோபம் நிலைத்திருக்கிறது. ஆனால், நற்செய்தியை அறிந்து இரட்சகராகிய இயேசுவை உண்மையான மற்றும் உயிருள்ள/மேன்மையான விசுவாசத்தினால் தழுவிக்கொள்ளும் அனைவரையும் அவர் கடவுளின் கோபத்திலிருந்தும் அழிவிலிருந்தும் விடுவிக்கிறார். அப்படிப்பட்டவர்களுக்கு நித்திய ஜீவன் பரிசாக வழங்கப்படுகிறது.

கட்டுரை 5
இந்த அவநம்பிக்கை (அவிசுவாசம்) அல்லது குற்றதின்  காரணம் மற்றும் பிற எல்லா பாவங்களுக்கும் காரணம்  மனிதனே காரணம். கடவுள் காரணமல்ல. அதேசமயம், இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதும் மற்றும் கிறிஸ்துவின் மூலமாய் வருகிற இரட்சிப்பும் கடவுளின் இலவசப் பரிசாகும்.

"கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு/பரிசு"(எபேசியர்2:8) மற்றும் "ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் சுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல..."(பிலிப்பியர் 1:29) என்று பரிசுத்த வேதாகமத்தில் எழுதியிருக்கிறதே.

கட்டுரை 6:

விசுவாசம் என்னும் பரிசினை சிலர் கடவுளிடமிருந்து பெற்றுக்கொள்ளுகிறார்கள். மற்றவர்களால் அதைப் பெற்றுக்கொள்வதில்லை என்பது கடவுளின் நித்திய ஆணையிலிருந்து பெறப்படுகிறது."உலகதோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது"(அப்போஸ்தலர் 15:18)."தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே..."(எபேசியர் 1:12). அந்த ஆணையின்படி, அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் இருதயங்களை கருணையுடன் மிருதுவாக்குகிறார். எவ்வளவு பிடிவாதமாக இருந்தாலும் அவர்களை விசுவாசிக்கத் தூண்டுகிறார். அதேநேரத்தில் அவர் தனது நியாயமான தீர்ப்பில் தேர்ந்தெடுக்கப்படாதவர்களை அவர்களின் சொந்த துன்மார்க்கத்திலும் மற்றும் குற்றத்தை உணராத நிலையிலும் விட்டுவிடுகிறார். இது குறிப்பாக கடவுளின் செயல்லை புரிந்துகொள்ளமுடிகிறது. அது போலவே அவர் இரக்கமுள்ளவர் அதே நேரத்தில் நீதியுள்ளவர் என்றும் மற்றும் பொதுவான அழிவில் சிக்கி கொண்டே மனிதர்களிடையே நீதியான பாகுபாடு காணப்படுகிறது. இது கடவுளின் வார்த்தையில் தேர்ந்தெடுக்கப்படுதல் மற்றும் நிராகரித்தல்லுக்கான ஆணை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. துன்மார்க்க, தூய்மையற்ற, நிலையற்றவர்கள் இந்த ஆணையை தங்கள் சொந்த அழிவுக்கு திரிக்கிறார்கள் ஆனால் பரிசுத்த மற்றும் பக்தியுள்ள ஆத்மாக்களுக்கு (இந்த ஆணையை) வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட ஆறுதலளிக்கிறது.

கட்டுரை 7

தேர்ந்தெடுக்கப்படுதல் என்பது கடவுளின் மாறாத நோக்கமாகும். இதன் மூலம் உலகத்தை உண்டாக்குவதற்கு முன்பு அவர் அவரது சுத்த கிருபையினாலும் தனது சொந்த விருப்ப இறையாண்மையின் நல்ல இன்பத்தின்படியும், தங்கள் சொந்த தவறுகளால் ஆரம்ப நீதியின் நிலையிலிருந்து பாவம் மற்றும் அழிவுக்குள் வீழ்ந்த முழு மனித இனத்திலிருந்தும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நபர்களை மீட்க கடவுள் தேர்ந்தெடுத்தார். அவர் கிறித்துவை மத்தியஸ்தராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் தலைவராகவும் மற்றும் இரட்சிப்பின் அடித்தளமாகவும் நியமித்தார். இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் இயற்கையில் மற்றவர்களைவிட சிறந்தவர்களோ அல்லது தகுதியானவர்களோ இல்லை. ஆனால் மற்றவர்களைப்போல பொதுவான துயரத்தில் சிக்கிக்கொண்டவர்கள். இவர்களை கிறிஸ்துவுக்குக் கொடுக்கவும், அவரால் இரட்சிக்கப்படவும் கடவுள் ஆணையிட்டார். மேலும் திறம்பட அவர்களை அவருடைய வார்த்தையினாலும் ஆவியினாலும் அழைப்பதின் மூலமாக வரும், உண்மையான விசுவாசம், நியாயப்படுத்துதல்

மற்றும் பரிசுத்தமாக்குதல் ஆகியவற்றை வழங்கவும் கடவுள் ஆணையிட்டார். "தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகதோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே,பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக,
தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்."(எபேசியர் 1:4-6). "எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை
மகிமைப்படுத்தியுமிருக்கிறார்."(ரோமர் 8:30).

கட்டுரை 8
தேர்ந்தெடுக்கப்படுதலில் பல்வேறு ஆணைகள் இல்லை. மேலும் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் கீழ் இரட்சிக்கப்பட வேண்டிய அனைவரும் ஒரே ஆணையால் இரட்சிக்கப்படுகிறார்கள். தெய்வீக சித்தத்தின் நல்ல இன்பம், நோக்கம் மற்றும் ஆலோசனை ஒன்று என்று பரிசுத்த வேதாகமம் அறிவிப்பதால் அதன்படி அவர் (கடவுள்) நித்தியத்திலிருந்து கிருபையுக்கும் மற்றும் மகிமைக்கும் இரட்சிப்புக்கும் மற்றும் இரட்சிப்பின் வழிக்கும் நம்மைத் தேர்ந்தெடுத்தார். அதில் நாம் நடக்க வேண்டும் என்று அவர் ஆணையிட்டார்.

கட்டுரை 9
ஊகிக்கக்கூடிய விசுவாசம், விசுவாசத்தினால் வரும் கீழ்ப்படிதல், பரிசுத்தம், அல்லது மனிதனில் வேறு எந்த நல்ல குணாதிசயம் ஆகியவற்றை முன்நிபந்தனையாகவோ காரணமாகவோ அல்லது நிபந்தனையாகவோ சார்ந்திருந்து இந்தத் தேர்ந்தெடுக்கப்படுதல் நிறுவப்படவில்லை (தோன்றவில்லை).ஆனால் மனுக்குலம் விசுவாசத்திற்கும் விசுவாசத்தினால் வரும் கீழ்ப்படிதலுக்கும் பரிசுத்தத்திற்கும்
முதலிவற்றுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலன் எபேசியர் 1:4 சொல்வது,"தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு (நாம் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாய் இருந்ததினால் அல்ல), அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே" எனவே தேர்ந்தெடுக்கப்படுதல் என்பது ஒவ்வொரு இரட்சிக்கிற நன்மையின் நீரூற்று. இதில் இருந்து விசுவாசம், பரிசுத்தம் மற்றும் இரட்சிப்பின் பிற பரிசுகள் வருகின்றன மற்றும் நித்திய ஜீவன் அதன் பழங்கள் மற்றும் விளைவுகள்.

கட்டுரை 10
கடவுளின் நல்ல இன்பமே இந்த கிருபையான தேர்ந்தெடுக்கப்படுதல்லுக்கு ஒரே காரணம். அதன் காரணம் கடவுள் எல்லா சாத்தியக்கூறுகளிலிருந்தும் சில மனித குணங்களை அல்லது செயல்களை இரட்சிப்பின் நிபந்தனையாகத் தேர்ந்தெடுத்துள்ளார் என்பதல்ல.ஆனால் அவர் பொதுவான பாவிகளிடமிருந்து சில குறிப்பிட்ட நபர்களை தனக்கு ஒரு விசித்திரமான மக்களாக தத்தெடுப்பதில் மகிழ்ச்சியடைந்தார். ஏன்னனில்

ரோமர் 9:11-13 "பிள்ளைகள் இன்னும் பிறவாமலும், நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலுமிருக்கையில், தேவனுடைய தெரிந்துகொள்ளுதலின்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலைநிற்காமல் அழைக்கிறவராலே நிலைநிற்கும்படிக்கு, மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ்செய்வான் என்று அவளுடனே (ரெபெக்காள்ளுக்கு) சொல்லப்பட்டது.அப்படியே, யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது." மற்றும் அப்போஸ்தலர் 13:48யில் "நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்." என்று எழுதியிருக்கிறது.

கட்டுரை 11

கடவுளே மிகவும் ஞானமுள்ளவர், மாறாதவர், எல்லாம் அறிந்தவர் மற்றும் சர்வ வல்லமையுள்ளவர் என்பதால் அவர் ஆணையிட்ட தேர்ந்தெடுக்கப்படுதல்லுக்கு இடையூறு ஏற்படவோ மாற்றவோ திருப்பியழைக்கவோ அல்லது ரத்து செய்யவோ முடியாது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை வெளியே எறியவோ மற்றும் அவர்களின் எண்ணிக்கை குறைக்கவோ முடியாது.

கட்டுரை 12

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தங்கள் விசுவாச வாழ்க்கையில் பல்வேறு அளவுகளிலும் வெவ்வேறு நடவடிக்கைகளிலும் இருந்தாலும் உரிய நேரத்தில் அவர்களின் நித்திய மற்றும் மாறாத தேர்ந்தெடுக்கப்படுதலின் உறுதிப்பாட்டை அடைகிறார்கள். இது கடவுளின் இரகசிய மற்றும் ஆழமான விஷயங்களை விசாரிப்பதன் மூலம் அறிவது அல்ல. மாறாக தங்களுக்குள் ஆவிக்குரிய மகிழ்ச்சி மற்றும் பரிசுத்த இன்பத்தை காண்பதில் மூலம் மற்றும் கிறிஸ்துவின் மீதான உண்மையான நம்பிக்கை, சகோதர அன்பு, பாவத்தினால் வருகிற தெய்வீக துக்கம், நீதியின்மேல் பசிதாகம் அடைதல் போன்றன கடவுளுடைய வார்த்தையில் சுட்டிக்காட்டப்பட்ட தேர்ந்தெடுக்கப்படுதலின் தவறே இல்லாத பலன்கள்.

கட்டுரை 13

இந்த உணர்வின் மற்றும் தேர்ந்தெடுக்கப்படுதலின் உறுதியின் விளைவாக, கடவுளின் பிள்ளைகள் தினந்தோறும் கடவுளுக்கு முன்பாக தங்களைத் தாழ்த்திக் கொள்வதற்கும், தங்களைத் பரிசுத்தப்படுத்திக் கொள்வதற்கும் அவரது இரக்கத்தின் ஆழத்தை வணங்குவதற்கும், அவர்களை முதலில் பெரிதும் அன்பு செலுத்தியவரை அன்பு செலுத்துவதற்கும் ஆவலுடன் அதிக காரணங்களைக் காண்கிறார்கள்.ஆகவே, இந்தத் தேர்ந்தெடுக்கப்படுதல் என்கிற கோட்பாடும் மற்றும் அதைப் பற்றிய தியானமும் கடவுளின் பிள்ளைகளை கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் மந்தமாக்கவோ அல்லது அவர்களை மாமிசப் பாதுகாப்பதில் வாழவோ செய்வதில்லை.மாறாக, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் வழிகளில் நடப்பதை விரும்பாதவர்களில் கடவுளின் நியாயமான தீர்ப்பின்படி கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் மந்தமாக்கவும் மற்றும் மாமிசப் பாதுகாப்பில் வாழ்கிறவர்களாகவும் இருப்பது பொதுவாகக் காணப்படுகிறது.அத்தகையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுதலின் கிருபையை தவறாக கருதுகிறார்கள் மேலும் அதைப் பற்றி பயனின்றி மற்றும் வெட்கமின்றி பேசுகிறார்கள்.

கட்டுரை 14
கடவுளின் மிக ஞானமான ஆலோசனையால் தெய்வீகத் தேர்ந்தெடுக்கப்படுதல் என்கிற கோட்பாடு தீர்க்கதரிசிகளால் கிறிஸ்துவால் மற்றும் அப்போஸ்தலர்களால் அறிவிக்கப்பட்டது, மேலும் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் வேதவசனங்களில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.ஆகவே இது தேவனுடைய திருச்சபையில் உரிய நேரத்திலும் இடத்திலும் போதிக்கப்பட வேண்டும். அது விசித்திரமாக தேவனுடைய திருச்சபைக்காக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் பயபக்தியுடனும் விவேகத்துடனும் பக்தியுடனும் உன்னதமானவரின் இரகசிய வழிகளை வீணாக விசாரிக்காமல் மற்றும் கடவுளின் பரிசுத்த நாமத்தின் மகிமைக்காகவும் அவருடைய மக்களை உயிர்ப்பிப்பதற்கும் ஆறுதல்படுத்துவதற்கும் இதை போதிக்க வேண்டும். அப்போஸ்தலர் 20:26 ரோமர் 11:33-34; 12:3 எபிரெயர் 6:17-18

கட்டுரை 15
தேர்ந்தெடுக்கப்படுதலின் நித்திய மற்றும் சம்பாதித்திடாத கிருபையை நமக்கு எடுத்துக்காட்டுவதற்கும் பரிந்துரைப்பதற்கும் விசித்திரமாக இருப்பது என்னவென்றால் பரிசுத்த வேதாகமத்தின் வெளிப்படையான சாட்சி.பரிசுத்த வேதாகமம் சொல்வது என்னவென்றால் அனைவரும் அல்ல சிலர் மட்டுமே தேர்ந்தெடுக் படுகிறார்கள் மற்றவர்கள் கடவுளின் நித்திய தேர்ந்தெடுக்கப்படுதலில் கைவிடுப்படுகிறார்கள். அவர்கள் வேண்டுமென்றே தங்களைத் தாங்களே பொதுவான துயரங்களில் மூழ்கடித்து கொண்டார்கள்.அவர்களை அந்தநிலையிலே விட்டுவிடும்படி மற்றும் இரட்சிக்கிற விசுவாசத்தையும் மனம் மறுதலின் கிருபையையும் அவர்களுக்கு வழங்கக்கூடாது என்றும். ஆனால் அவர் தங்கள் சொந்த வழிகளைப் பின்பற்றுவதற்காக கடவுள் அவருடைய நீதியான நியாயதீர்ப்பில் அவர்களை விட்டு விட்டார். கடைசியில் அவருடைய நீதியை அறிவிக்கவும் அவர்களுடைய விசுவாசம் இல்லாத காரணத்தினால் மட்டுமல்லாமல் அவர்களுடைய மற்ற எல்லா பாவங்களுக்கும் அவர்களை என்றென்றும் கண்டனம் செய்வதற்கும் தண்டிப்பதற்கும் கடவுள் அவருடைய இறையாண்மையிலிருந்து மிகவும் நீதியான குற்றமற்ற மற்றும் மாற்றமுடியாத நல்ல இன்பதிலிருந்து ஆணை இட்டார். இது மறுதலிப்பின் (நிராகரிப்பின்) ஆணையாகும் இது எந்த வகையிலும் கடவுளை பாவத்தின் ஆசிரியராக ஆக்குவதில்லை (அப்படிப்பட்ட ஒரு சிந்தனை தேவதூஷணம் ஆகும்) ஆனால் அவரை ஒரு வல்லமைமிக்க குற்றமற்ற நீதியுள்ள நீதிபதியாக மற்றும் பழிவாங்கும் கடவுளாக அறிவிக்கிறது.

கட்டுரை 16
சிலர் கிறிஸ்துவில் உயிரோட்டமான விசுவாசம், ஆத்மாவின் உறுதியான நம்பிக்கை, மனசாட்சியின் அமைதி, குழந்தை போல் கீழ்ப்படிதலுக்கு உற்சாகமான முயற்சி செய்தல், கிறிஸ்துவின் மூலமாக கடவுளை மகிமைப்படுத்துதல் போன்றவற்றில் முழுமையாக பங்குபெறாமல் இருக்கலாம். ஆயினும்கூட இந்த அருட்கொடைகளை நம்மில் வேலை செய்வதற்கு கடவுள் நியமித்துள்ள வழிகளைப் பயன்படுத்துவதில் தொடர்ந்து முயற்சி செய்கிறவர்கள் நிராகரிப்பைப் (மறுதலிப்பைப்) பற்றி

கவலைப்படக்கூடாது, நிராகரிக்கப்பட்டவர்கள் என்று தங்களை நினைத்து கொள்ளக்கூடாது.ஆனால் அவர்கள் விடாமுயற்சியுடன் அருட்கொடைகலின் வழிகளை தொடர்ந்து பயன்படுத்துவதிலும் மற்றும் தீவிரமான விருப்பத்துடனும், பக்தியுடனும் மற்றும் பணிவுடனும் முழுமையான கிருபையின் பருவத்திற்காக காத்திருக்க வேண்டும்.அவர்கள் நிராகரிப்பின் கோட்பாட்டின் நிமித்தம் பயப்படுவதற்கு மிகக் குறைவான காரணங்கள் உள்ளன. கடவுளிடம் திரும்ப வேண்டும், அவரை மட்டுமே மகிழ்விக்க வேண்டும், மரண உடலிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் தீவிரமாக விரும்பினாலும்; அவர்கள் விரும்புகிற அந்த அளவிலான பரிசுத்த தன்மை மற்றும் விசுவாசம் இன்னமும் அவர்களால் அடைய முடியாமல் இருக்கலாம்.ஏனெனில் இரக்கமுள்ள கடவுள் அவர் நெரிந்தநாணலை முறிக்காமலும், மங்கி எரிகிற திரியை அணைக்காமலும் இருப்பார் என்று வாக்குறுதி அளித்திருகிறார்.ஆனால் கடவுளையும் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவையும் பொருட்படுத்தாமல், உலகின் அக்கறைகளுக்கும், மற்றும் மாம்சத்தின் இன்பங்களுக்கும் முற்றிலும் தங்களை அர்ப்பணித்தவர்களுக்கு, மற்றும் அவர்கள் தீவிரமாக கடவுளாக மாற்றப்படாத வரை இந்த கோட்பாடு அவர்களுக்கு ஒரு நியாயமான பயங்கரம்.

கட்டுரை 17

கடவுளுடைய சித்தத்தை அவருடைய வார்த்தையிலிருந்து நாம் தீர்மானிக்க வேண்டும் என்பதால் கடவுளின் வார்த்தை சாட்சியளிப்பது என்னவென்றால் விசுவாசிகளின் பிள்ளைகள் பரிசுத்தவான்கள், இயற்கையினால் அல்ல, ஆனால் கிருபையின் உடன்படிக்கையின் காரணமாக, அவர்கள் பெற்றோருடன் இந்த உடன்படிக்கையில் சேர்க்கப்படுகிறார்கள். குழந்தை பருவத்திலேயே அவர்களை இந்த வாழ்க்கையிலிருந்து அழைக்க கடவுள் விருப்பம்கொண்டால் தெய்வ பக்தியுள்ள பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் தேர்தெடுக்கப்படுத்தல் மற்றும் இரட்சிப்பைப் பற்றி சந்தேகிக்க எந்த காரணமும் இல்லை.

கட்டுரை 18

தேர்தெடுக்கப்படுத்தல்லின் இலவச கிருபையும் மற்றும் பற்றி நிராகரிக்கப்படுத்தல்லின் தீவிரத்தையும் முணுமுணுப்பவர்களுக்கும் அப்போஸ்தலருடன் நாங்கள் பதிலளிக்கிறோம்: "அப்படியானால், மனுஷனே, தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்?" ரோமர் 9:20 எங்கள் இரட்சகரின் மொழியை மேற்கோள் லிடுகிறோம், "என்னுடையதை என் இஷ்டப்படிச் செய்ய எனக்கு அதிகாரமில்லையா?" மத்தேயு 20:15 அப்போஸ்தலரின் வார்த்தைகளில் நாங்கள் கூக்குரலிடுகிறோம்,"ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்?தனக்குப் பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்?சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்."

பிழைகளை ஒதுக்குதல்

தேர்தெடுக்கப்படுத்தல் மற்றும் நிராகரிக்கப்படுத்தல்லின் தொடர்பான உண்மையான கோட்பாடு விளக்கப்பட்டுள்ளதால் ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற பிழைகளை ஒதுக்குகிறது:

1
ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
இரட்சிப்பிற்கான தேர்தெடுக்கப்படுத்தல்லின் முழமையான மற்றும் மொத்தமான ஆணை என்னவென்றால் விசுவாசத்திலும் விசுவாசத்தின் கீழ்ப்படிதலிலும் முடிவுபரியந்தம் இருக்கிற விசுவாசமுள்ளவர்களைக் காப்பாற்றுவது கடவுளின் விருப்பம். இந்த ஆணையைப் பற்றி வேறு எதுவும் கடவுளுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்படவில்லை. இதைக் கற்பிப்பவர்கள் மிகவும் எளிமையான மக்களை ஏமாற்றுகிறார்கள் மற்றும் தெளிவாக வேதத்திற்கு முரண்படுகிறார்கள். கடவுள் விசுவாசிக்கிறவர்களைக் காப்பாற்றுவார் என்று மட்டுமல்லாமல் நித்தியத்திலிருந்தும் சில குறிப்பிட்ட நபர்களைத் தேர்ந்தெடுத்தார் மற்றும் அவர் நேரத்தில் மற்றவர்களுக்கு மேலாக அவர்களுக்கு கிறிஸ்துவில் விசுவாசத்தையும் மற்றும் முடிவுபரியந்தம் நிலைநிற்பதையும் இந்த இரண்டையும் கொடுப்பார் என்றும் வேதம் அறிவிக்கிறது. "நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்." யோவான்17:6 "நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்." அப்போஸ்தலர் 13:48 "தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே." எபேசியர் 1:4 என்று எழுதியிருக்கிறதே.

2
ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
நித்திய ஜீவனை அடைவதற்கு கடவுளின் தேர்தெடுக்கப்படுத்தலில் பல்வேறு வகைகள் உள்ளன: ஒன்று பொது மற்றும் காலவரையற்றது, மற்றொன்று குறிப்பிட்ட மற்றும் திட்டவட்டமானது; மேலும் பிந்தையது முழுமையற்றது, திரும்பப்பெறக்கூடியது, தீர்க்கமுடியாதது மற்றும் நிபந்தனைக்குட்பட்டது, அல்லது முழுமையானது, மாற்றமுடியாதது, தீர்க்கமான மற்றும் முழுமையானது. அதேபோல்: விசுவாசத்திற்கு ஒரு தேர்தெடுக்கப்படுத்தலும், இரட்சிப்பிற்கு மற்றொரு தேர்தெடுக்கப்படுத்தலும் உள்ளது, இதனால் தேர்தெடுக்கப்படுத்தல் விசுவாசத்தை நியாயப்படுத்தும், இரட்சிப்புக்கு தேர்தெடுக்கப்படுத்தல் உறுதியான காரணமாக இல்லாமல் இருக்க முடியும்.இது மனித மனதில் ஒரு கற்பனை ஆகும் மற்றும் இது வேதவசனங்களைப் பொருட்படுத்தாமல் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் தேர்தெடுக்கப்படுத்தலின் கோட்பாடு சிதைக்கப்படுகிறது, மேலும் நம்முடைய இரட்சிப்பின் இந்த தங்கச் சங்கிலி உடைக்கப்படுகிறது:"எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்." ரோமர் 8:30

3
ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
கடவுளின் நல்ல இன்பமும் நோக்கமும் மற்றும் வேதாகமம் குறிப்பிடுகிற தேர்தெடுக்கப்படுத்தலின் கோட்பாடு இது அல்ல மற்றவர்களை விட சில நபர்களை கடவுள் தேர்ந்தெடுக்கிறார். மாறாக அவர் சாத்தியமான எல்லா நிலைமைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கிறார் (அவற்றில் கூட நியாயப்பிரமாணத்தின் செயல்கள்), அல்லது விஷயங்களின் முழு வரிசையிலிருந்தும், விசுவாசத்தின் செயல் தேர்ந்தெடுக்கப்படுகிறது மற்றும் விசுவாசம் அதன் இயல்பிலிருந்து வேறுபடுத்தப்படாதது. அதே போல் அதன் முழுமையற்ற கீழ்ப்படிதல் இரட்சிப்பின் நிபந்தனையாகும்.
மேலும் அவர் இதை ஒரு முழுமையான கீழ்ப்படிதலாக கருதி அதை தகுதியானதும் மற்றும் நித்திய ஜீவனின் வெகுமதி என்று கிருபையாக தகுதியானதாக எண்ணுகிறார்.இந்த தீங்கு விளைவிக்கும் பிழையால் கடவுளின் இன்பமும் கிறிஸ்துவின் நற் செயல்களும் பயனற்று போகிறது. மேலும் கிருபையான நியாயப்படுத்தலின் சத்தியத்திலிருந்தும் வேதத்தின் எளிமையிலிருந்தும் மனிதர்கள் திசை திருப்படுகிறார்கள் மற்றும் பயனற்ற கேள்விகளை சிந்திக்கிறார்கள். மேலும் அப்போஸ்தலரின் இந்த அறிவிப்பு பொய் என்று குற்றம் சுமத்தப்படுகிறது: "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்." II தீமோத்தேயு 1:9

4
ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
விசுவாசத்திற்கான தேர்தெடுக்கப்படுத்தலில் இந்த நிபந்தனை தேவைப்படுகிறது. மனிதர்கள் இயற்கையின் ஒளியை சரியாகப் பயன்படுத்தவும் மேலும் பக்தியுள்ளவர்களாகவும், சாந்தகுணமுள்ளவர்களாகவும், தாழ்மையுள்ளவர்களாகவும், நித்திய ஜீவனை விரும்புகிறவர்களாகவும் இருக்க வேண்டும். தேர்தெடுக்கப்படுதல் ஓரளவிற்கு இந்த விஷயங்களை சார்ந்தது போல கற்பிப்பது.இது பெலஜியஸின் போதனையை ரசிப்பதும், அப்போஸ்தலரின் கோட்பாட்டை எதிர்ப்பதும் ஆகும்.ஏனென்றால் அவர் இவ்வாறு எழுதியிருக்கிறார்: "அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்டியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால்

உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல."எபேசியர் 2:3-9

5
ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
இரட்சிப்பிற்கான குறிப்பிட்ட நபர்களைத் தேர்ந்தெடுப்பது முழுமையானதல்ல மற்றும் தீர்க்கமானதல்ல, இது முன்னறிவிக்கப்பட்ட விசுவாசம், மனந்திரும்புதல், பரிசுத்தத்தன்மை மற்றும் தெய்வ பக்தி ஆகியவற்றின் அடிப்படையில் செய்யப்படுகிறது, இது சில காலம் தொடங்கி தொடர்ந்தது கொண்டுவருகிறது. முன்னறிவிக்கப்பட்ட விசுவாசம், மனந்திரும்புதல், பரிசுத்தத்தன்மை மற்றும் தெய்வ பக்தி ஆகியவற்றில் முடிவுபரியந்தம் நிலைநிற்பதின் மூலம் தேர்தெடுக்கப்படுத்தல் முழுமையானதாகவும் தீர்க்கமானதாகவும் மாறும்.தேர்ந்தெடுக்கப்படாதவரை விட தேர்ந்தெடுக்கப்பட்டவர் மிகவும் தகுதியானவர் என்பதன் காரணமாக இது கிருபையும் மற்றும் சுவிசேஷ தகுதியாகும்.ஆகவே, விசுவாசம், விசுவாசத்தின் கீழ்ப்படிதல், பரிசுத்தத்தன்மை, தெய்வ பக்தி, மற்றும் முடிவுபரியந்தம் நிலைநிற்கிறது ஆகியவை மகிமைக்கான மாறாத தேர்தெடுக்கப்படுத்தலின் பலனோ அல்லது விளைவோ அல்ல.மாறாக, அவைகள் நிபந்தனைகள் அல்லது காரணங்கள். அவைகள் இல்லாமல் இந்த நபர்கள் முழுமையாகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாது. அவைகள் முன்நிபந்தனைகளாக இருப்பதால் அவைகளை பூர்த்தி செய்யப்படுவதாக காணப்படுகிறது. இது முழு வேதாகமத்திற்கு அருவருப்பானது. வேதாகமம் மீண்டும் மீண்டும் இந்த வசனங்களிலும் இதுபோன்ற பல வசனங்களிலும் நம் காதுகளுக்கும் இருதயங்களுக்கும் அறிவிக்கிறது: "தேவனுடைய தெரிந்துகொள்ளுதலின்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலைநிற்காமல் அழைக்கிறவராலே நிலைநிற்கும்படிக்கு." ரோமர் 9:11 "நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்." அப்போஸ்தலர் 13:48 "தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே." எபேசியர் 1:4 "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்."யோவான் 15:16 "அது கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது." ரோமர் 11:6 "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது." I யோவான் 4:10

6
ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
இரட்சிப்பின் அனைத்து தேர்தெடுக்கப்படுத்தல்களும் மாறாதவை அல்ல. மேலும் கடவுளின் ஆணை இருந்தபோதிலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் சிலர் அழிந்து போகக்கூடும் மற்றும் நித்யமாகவே அவர்கள் அழிந்து போவார்கள்.எந்த மோசமான பிழையின் மூலம் அவர்கள் கடவுள்

மாறக்கூடியவராக ஆக்குகிறார்கள், மேலும் தெய்வ பக்தியுள்ளவர்கள் தங்கள் தேர்தெடுக்கப்படுதலின் உறுதியிலிருந்து பெறும் ஆறுதலையும் அழிக்கிறார்கள், பரிசுத்த வேதாகமத்திற்கு முரணாக இருக்கிறார்கள்.ஏனெனில் வேதாகமம் இவ்வாறு கூறுகிறது தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வழிதவற முடியாது, மத்தேயு 24: 24; பிதா கிறிஸ்துவிற்க்கு கொடுத்தவர்களை கிறிஸ்து இழக்க மாட்டார், யோவான் 6:39 கடவுள் எவர்களை முன்குறித்தாரோ, அவர்களை அழைத்துமிருக்கிறார்; நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார். ரோமர் 8:30

7
ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
இந்த வாழ்க்கையில் மகிமைக்கான மாறாத தேர்தெடுக்கப்படுத்தலின் நனவு இல்லை இதில் எந்தப் பயனும் இல்லை அனால் மாறக்கூடிய மற்றும் நிச்சயமற்ற நிலை உடைய தேர்தெடுக்கப்படுத்தலை தவிர வேறு எதுவும் உறுதி இல்லை.ஏனென்றால், நிச்சயமற்ற உறுதிப்பாட்டைப் பற்றி பேசுவது அபத்தமானது மட்டுமல்லாமல், பரிசுத்தவான்களின் அனுபவத்திற்கு முரணானது. அவர்கள் தேர்தெடுக்கப்படுத்தலின் நனவின் காரணமாக அப்போஸ்தலருடன் சந்தோஷப்படுகிறார்கள், கடவுளின் இந்த தயவைப் புகழ்ந்து பேசுகிறார்கள், எபேசியர் 1; கிறிஸ்துவின் அறிவுறுத்தலின் படி, தம்முடைய சீஷர்கள் தங்கள் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருப்பதைப் பற்றி சந்தோஷப்படுகிறார்கள், லூக்கா 10:20; அவர்கள் தங்கள் தேர்தெடுக்கப்படுத்தலின் நனவை பிசாசின் அக்கினியாஸ்திரங்களுக்கு எதிராக வைத்து இவ்வாறு கேட்கிறார்கள்:"தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்?" ரோமர் 8:33

8
ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
கடவுள் வெறுமனே தனது நீதியுள்ள விருப்பத்தின் பேரில், ஆதாமின் வீழ்ச்சியிலும், பாவம் மற்றும் கண்டனத்தின் பொதுவான நிலையிலும் இருக்கிற யாரையும் விட்டுவிடவோ அல்லது விசுவாசத்திற்கும் மனமாற்றத்திற்கும் அவசியமான கிருபை மூலம் தொடர்பு கொள்ளுதல்லிலும் யாரையும் கடந்து செல்லவோ (விட்டுச்செல்லவோ) முடிவு செய்யவில்லை (தீர்மானிக்கவில்லை).இது உறுதியாக ஆணையிடப்பட்டுள்ளது: "ஆதலால் எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன்மேல் இரக்கமாயிருக்கிறார், எவனைக் கடினப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனைக் கடினப்படுத்துகிறார்." ரோமர் 9 :18. மற்றும் இதுவும்: "பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது.அவர்களுக்கோ அருளப்படவில்லை." மத்தேயு13:11 அதேபோல்: "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்।ஆம் பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது." மத்தேயு 11:25-26.

9
ஆலோசனை சபை (சீனாட்)  கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
கடவுள் ஒரு மக்களுக்கு (தேசத்தினர்/மக்கள் குழு) இன்னொருவருக்கு (தேசத்தினர்/மக்கள் குழு) பதிலாக நற்செய்தியை அனுப்புவதற்கான காரணம் வெறுமனே கடவுளின் நல்ல இன்பம் மட்டுமல்ல, மாறாக ஒரு மக்கள் (தேசத்தினர்/மக்கள் குழு) நற்செய்தியைத் தெரிவிக்காத மற்றவர்களை (தேசத்தினர்/மக்கள் குழு) விட சிறந்தவர்களாகவும் தகுதியுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.இதற்கு மோசே மறுக்கிறார், இஸ்ரவேல் மக்களை பின்வருமாறு உரையாற்றுகிறார்: "இதோ, வானங்களும் வானாதிவானங்களும், பூமியும் அதிலுள்ள யாவும், உன் தேவனாகிய கர்த்தருடையவைகள்.ஆனாலும் கர்த்தர் உன் பிதாக்கள்மேல் அன்புகூரும்பொருட்டு அவர்களிடத்தில் பிரியம் வைத்து, அவர்களுக்குப் பின் அவர்களுடைய சந்ததியாகிய உங்களை, இந்நாளில் இருக்கிறபடியே, சகல ஜாதிகளுக்குள்ளும் தமக்கென்று தெரிந்துகொண்டார்."உபாகமம் 10: 14-15. மற்றும் கிறிஸ்து கூறினார்:"கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்."மத்தேயு 11:21.

தலைப்பு 2: கிறிஸ்துவின் மரணம் மற்றும் அந்த மரணத்தின் மூலம் மனிதர்களின் மீட்பு

கட்டுரை 1
கடவுள் மிகவும் இரக்கமுள்ளவர் மட்டுமல்ல, மிகவும் நீதி உள்ளவர். அவருடைய எல்லையற்ற மகத்துவத்திற்கு எதிராக நாம் செய்த பாவங்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது  அவருடைய நீதியின்  (அவர் தமது  வார்த்தையில் வெளிப்படுத்தியபடி) தேவை. அவைகள்  உடலிலும் ஆன்மாவிலும் தற்காலிகமாக மட்டுமல்லாமல், நித்திய தண்டனையுடனும் தண்டிக்கப்பட வேண்டும். கடவுளின் நீதிக்கு திருப்தி அளிக்காவிட்டால் இந்த தண்டனைகளிலிருந்து நாம் தப்ப முடியாது.

கட்டுரை 2
ஆகவே, நம்மளோ நம்முடைய சொந்த முயற்சியாலோ  அதை (கடவுளின் நீதியை) திருப்தியைச் செய்யவோ, அல்லது கடவுளின் கோபத்திலிருந்து நம்மை விடுவிக்கவோ முடியாது. ஆதலால் தன்னுடைய அளவற்ற இரக்கத்தில் தம்முடைய ஒரேபேறான குமாரனை நம்முடைய  உத்திரவாதமாகக் கொடுப்பதற்கு கடவுள் மகிழ்ச்சி அடைந்தார். குமாரன் பாவமாக்கப்பட்டு, நம் சார்பாக கடவுளின் நீதியை திருப்தி அளிப்பதற்காக மற்றும் நமக்கும் நமக்குப் பதிலாக ஒரு சாபமாக மாறினார்.

கட்டுரை 3
தேவனுடைய குமாரனின் மரணம் பாவத்திற்கான ஒரே மற்றும் மிகச் சிறந்த பலியும்  திருப்தியும் ஆகும்; இது எல்லையற்ற தகுதியும் மற்றும்

மதிப்புடையது,இது முழு உலகின் பாவங்களையும் நீக்குவதற்கு ஏராளமாக போதுமானது.

கட்டுரை 4
இந்த மரணம் பின்வரும் காரணங்களுக்காக அதன் எல்லையற்ற மதிப்பையும் கண்ணியத்தையும் பெறுகிறது.ஏனென்றால், அதற்கு அடிபணிந்தவர் உண்மையில் மனிதர் மட்டுமல்ல, அவர் முற்றிலும் பரிசுத்தர், மற்றும் பிதாவினுடனும் பரிசுத்த ஆவியுடனும் ஒரே நித்திய மற்றும் எல்லையற்ற சாராம்சத்தை உடைய ஒரேபேறான தேவனுடைய குமாரன். அவர் நமக்கு ஒரு இரட்சகராக இருக்க இந்த தகுதிகள் அவசியமானது. மேலும் அவருடைய மரணம் அத்தகைய கண்ணியமும் மற்றும் மதிப்புக்குரியது, ஏனென்றால் அதில் நம்முடைய பாவங்களுக்காக கடவுளின் கோபமும் மற்றும் சாபத்தின் அனுபவத்துடன் இருந்தது.

கட்டுரை 5
மேலும், சுவிசேஷத்தின் வாக்குறுதி என்னவென்றால், சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை விசுவாசிக்கிற எவனும் அழிந்துபோகாமல் நித்திய ஜீவனைப் பெறுவான். கடவுள் தமது நல்ல இன்பத்திலிருந்து இந்த சுவிசேஷத்தை யாருக்கு அனுப்புகிறாரோ இந்த வாக்குறுதி உடனும் மனந்திரும்பவும் மற்றும் விசுவாசிக்கவும் என்கிற கட்டளை உடனும் எல்லா தேசங்களுக்கும், எல்லா நபர்களுக்கும் வெளிப்படையாக மற்றும் வேறுபாடின்றி அறிவிக்கப்பட வேண்டும் மற்றும் வெளியிடப்பட வேண்டும்.

கட்டுரை 6
மேலும், சுவிசேஷத்தால் அழைக்கப்பட்ட பலர் மனந்திரும்பாமல், கிறிஸ்துவை விசுவாசிக்காமல் இருக்கிறார்கள், அவ்விசுவாசத்தில் அழிந்து போகிறார்கள்; இது சிலுவையில் கிறிஸ்து அளித்த பலியில் ஏதேனும் குறைபாடு அல்லது பற்றாக்குறை காரணத்தினால் அல்ல.மாறாக, அது அவர்களின் சொந்த குற்றத்தினால் தான்.

கட்டுரை 7
ஆனால் உண்மையிலேயே விசுவாசிக்கிறவர்கள், கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் பாவத்திலிருந்தும் அழிவிலிருந்தும் விடுவிக்கப்பட்டு காப்பாற்றப்படுகிறார்கள், இந்த நன்மைக்காக கடவுளின் கிருபைக்கு மட்டுமே கடன்பட்டிருக்கிறார்கள். இது அவர்களுக்கு கிறிஸ்துவில் நித்தியத்திலிருந்து கொடுக்கப்படுகிறது, அவர்களுடைய எந்த தகுதிக்காகவும் கொடுக்கப்படவில்லை.

கட்டுரை 8
தம்முடைய குமாரனின் உயிர் கொடுக்கிற மற்றும் இரட்சிக்கிற மிகவும் மதிப்புமிக்க மரணம் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் நீட்டிக்கப்பட (சென்றடைய) வேண்டும் என்பதே பிதாவாகிய தேவனுடைய இறையாண்மையின் ஆலோசனையும், மிகவும் இரக்கம் உள்ள விருப்பமும்

நோக்கமும் ஆகும்.தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டும் நியாயப்படுத்தும் விசுவாசத்தை பரிசாக அளிக்கிறார், இதன்மூலம் அவர்களை தவறாமல் இரட்சிப்பிற்கு கொண்டு வருகிறார்.கிறிஸ்துவின் சிலுவையின் இரத்தத்தினாலே, புதிய உடன்படிக்கையை அவர் உறுதிப்படுத்தினார், ஒவ்வொரு ஜனங்களிலிருந்தும்,கோத்திரத்திலிருந்தும், பாஷைக்கார்ரிலிருந்தும், ஜாதிகளிலுமிருந்தும் (நாடுகளிலிருந்தும்) அனைவரையும், நித்தியத்திலிருந்து இரட்சிப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடமிருந்து மட்டுமே மீட்கப்பட வேண்டும் என்பது கடவுளின் விருப்பம்.இவர்கள் பிதாவினால் அவருக்கு வழங்கப்பட்டவர்கள்.கிறிஸ்து தம்முடைய மரணத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பெற்ற விசுவாசத்தையும் அவர்களுக்குக் கொடுக்கவும் மற்றும் அவர்களுக்காகப் பரிசுத்த ஆவியானவரின் மற்ற இரட்சிப்பின் வரங்களும் கொடுக்க வேண்டும் என்று கடவுள் சித்தமிட்டார்.மேலும் விசுவாசத்திற்கு முன்பும் விசுவாசத்திற்குப் பிறகும் அசல் (ஆதாமின் பாவம்) மற்றும் உண்மையான (சுய பாவம்) ஆகிய அனைத்து பாவங்களிலிருந்தும் கிறிஸ்து தனது இரத்தத்தால் அவர்களைத் தூய்மைப்படுத்த (பரிசுத்தமாக) வேண்டும் என்று அவர் சித்தமிட்டார்.கிறிஸ்து அவர்களை உண்மையாக கடைசிவரை பாதுகாக்க வேண்டும் என்றும் கடைசியில் அவர்களை எல்லாம் கறையிலிருந்து மற்றும் மாசிலிருந்து விடுவித்து, தனது முன்னிலையில் என்றென்றும் மகிமையை படுத்த வேண்டும் என்று அவர் சித்தமிட்டார்.

கட்டுரை 9

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு கடவுளின் நித்திய அன்பிலிருந்து தொடரும் இந்த நோக்கம், உலகின் ஆரம்பம் முதல் இன்றுவரை சக்திவாய்ந்த முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது, மேலும் நரகத்தின் வாயிற்கதவுகளின் (வாசல்களின்) பயனற்ற எதிர்ப்பையும் மீறி இனிமேலும் அது தொடர்ந்து நிறைவேற்றப்படும்.ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சரியான (ஏற்ற) நேரத்தில் (காலத்தில்) ஒன்று சேர்க்க படுவார்கள், விசுவாசிகளின் தேவாலயம் (திருச்சபை ) எப்போதும் இருக்கும். கிறிஸ்துவின் இரத்தம் இந்த தேவாலயத்தின் அஸ்திவாரம்.அது அவரை உறுதியுடன் நேசிக்கிறது, மற்றும் அதன் இரட்சகராக விசுவாசத்துடன் சேவை செய்கிறது. ஒரு மணமகன் தனது மணவாட்டிக்காக (தன் ஜீவனை கொடுப்பதுபோல்) அவர் சிலுவையில் தன் ஜீவனை கொடுத்தார். மேலும் அது இங்கேயும் நித்தியத்திலும் அவருடைய புகழைக் கொண்டாடுகிறது.

பிழைகளை ஒதுக்குதல்

உண்மையான கோட்பாடு விளக்கப்பட்டுள்ளது. ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:

1

ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:

பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனை சிலுவை மரணத்திற்கு நியமிதித்து இருக்கிறார் இதில் அவர் எவரையும் காப்பாற்ற (இரட்சிக்க) ஒரு குறிப்பிட்ட மற்றும் திட்டவட்டமான ஆணையை கட்டளையிடவில்லை. உண்மையில் எந்தவொரு நபருக்கும் இந்த

தகுதிவாய்ந்த மீட்பு பயன்படவில்லை (சென்றடையவில்லை ) என்றாலும், கிறிஸ்துவின் மரணத்தால் பெறப்பட்டவற்றின் தேவை, லாபம் மற்றும் மதிப்பு ஆகியவை இந்த ஆணையில் இருந்திருக்கலாம், மேலும் அதன் அனைத்து பகுதிகளிலும் முழுமை, பரிபூரணம் மற்றும் பழுதுபடாமல் இருக்கக்கூடும். இந்த கோட்பாடு பிதாவின் ஞானத்தையும் இயேசு கிறிஸ்துவின் தகுதிகளையும் இகழ்ந்து பார்க்கிறது, இது வேதத்திற்கு முரணானது.நம்முடைய இரட்சகர் இவ்வாறு கூறுகிறார், "ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்,நான் அவைகளை அறிந்திருக்கிறேன்."யோவான் 10:15,27. ஏசாயா தீர்க்கதரிசி இரட்சகரைப் பற்றி கூறுகிறார், "அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார், கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்." ஏசாயா 53:10. இறுதியாக இது, நாங்கள் நம்புகிற உலகளாவிய கிறிஸ்தவ தேவாலயத்தை விசுவாசத்தின் (அப்போஸ்தலர் விசுவாச பிரமானம்) கட்டுரைக்கு முரணானது.

2
ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
கிறிஸ்துவின் மரணத்தின் நோக்கம் அவர் தனது இரத்தத்தின் மூலம் கிருபையின் புதிய உடன்படிக்கையை உறுதிப்படுத்த வேண்டும் என்பதல்ல. மாறாக, மனிதர்களுடன் மீண்டும் ஒரு உடன்படிக்கையை அது கிருபையின் உடன்படிக்கையோ அல்லது கிரியையின் உடன்படிக்கையோ நிறுவுவதற்கான வெறும் உரிமையை அவர் பிதாவுக்காகப் பெறுவார் என்பதே. இது வேதத்திற்கு அருவருப்பானது, ஏனென்றால் அது கிறிஸ்து விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்.(எபிரெயர் 7:22) அதுதான் புதிய உடன்படிக்கை மற்றும் மரணமுண்டானபின்பே மரணசாசனம் உறுதிப்படும் (எபிரெயர் 9:15,17) என்று போதிக்கிறது.

3
ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
கிறிஸ்து தமது திருப்தியின் [சிலுவை மரணம்] மூலம் இரட்சிப்பு மற்றும் விசுவாசம் ஆகியவைகளை நிச்சயமாக யாருக்கும் பெற்று தரவில்லை. இதன் மூலம் கிறிஸ்துவின் இந்த திருப்தி [சிலுவை மரணம்] இரட்சிப்புக்கு திறம்பட பயன்படுத்தப்படுகிறது.மாறாக, அவர் பிதாவுக்காக அதிகாரம் அல்லது முழு சித்தத்தை மட்டுமே பெற்றுள்ளார், மனிதர்களுடன் புதிதாக வேலை செய்வதற்கும், புதிய நிபந்தனைகளை அவர் விரும்பியபடி பரிந்துரைப்பதற்கும் இது பயனுள்ளதாக இருக்கிறது.இந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்வது மனிதனின் சுய (சுதந்திர) சித்தத்தில் சார்ந்துள்ளது, அவற்றை ஒருவராலும் நிறைவேற்ற முடியாது அல்லது எல்லோராலும் நிறைவேற்ற முடியும்.இந்த ஆசிரியர்கள் (போதகர்கள்) கிறிஸ்துவின் மரணத்தை குறித்து மிகக் குறைவான முறையில் சிந்திக்கிறார்கள் மற்றும் அவர்கள் அவருடைய (கிறிஸ்து உடைய )மரணத்தின் முக்கிய பலனையும் நன்மையையும் அங்கீகரிக்கவில்லை. அங்கீகரிப்பதில்லை.அவர்கள் நரகத்திலிருந்து பெலஜியன் பிழையை வெளியே கொண்டு வருகிறார்கள்.

4
ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
கிறிஸ்துவின் மரணத்தின் மத்தியஸ்தத்தின் மூலம் பிதாவாகிய தேவன் மனிதர்களுடன் செய்யப்பட்ட கிருபையின் புதிய உடன்படிக்கை இது அல்ல: கிறிஸ்துவின் தகுதியை (நற்கிரியைகளை) விசுவாசம் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு, நாம் நியாயப்படுத்தப்பட்டு கடவுளுக்கு முன்பாக இரட்சிக்கப்படுகிறோம். மாறாக புதிய உடன்படிக்கை இதைக் கொண்டுள்ளது:நியாயப்பிரமாணத்தின் முழுமையான கீழ்ப்படிதலுக்கான கோரிக்கையை கடவுள் ரத்து செய்துள்ளார். விசுவாசத்தையும் விசுவாசத்தின் கீழ்ப்படிதலையும் கருதுகிறார், அபூரணமாக இருந்தாலும், நியாயப்பிரமாணத்தின் முழுமையான கீழ்ப்படிதலாகவும்,கிருபையின் மூலம் நித்திய ஜீவனின் வெகுமதிக்கு அது தகுதியானது என்று கருதுகிறார். இந்த ஆசிரியர்கள் (போதகர்கள்) வேதத்திற்கு முரணானவர்கள், "இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்; கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்."ரோமர் 3:24,26. அவர்கள் பொல்லாத சோசினஸைப் போல முழு திருச்சபையின் ஒருமித்த கருத்துக்கு எதிராக ஒரு புதிய மற்றும் விசித்திரமான கடவுளுக்கு முன்பாக மனிதன் நியாயப்படுத்துதலின் போதனையை கற்பிக்கிறார்கள்.

5
ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
எல்லா மனிதர்களும் ஒப்புரவாக்குதலின் நிலைக்கும் உடன்படிக்கையின் கிருபையுக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். ஆகவே, முதலாம் (ஆதாமின் பாவம்) பாவத்தின் காரணமாக யாரும் கண்டனத்திற்கு தகுதி உள்ளவர்கள் இல்லை. அதன் காரணமாக யாரும் கண்டிக்கப்பட மாட்டார்கள். ஆனால் முதலாம் பாவத்தின் குற்றத்திலிருந்து அனைவரும் விடுபடுகிறார்கள்.இந்த கருத்து வேதத்திற்கு முரணானது ஏனெனில் சுபாவத்தினாலே கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். எபேசியர் 2:3

6
நிறைவேற்றுவதற்கும் பயன்படுத்துவதற்கும் உள்ள வேறுபாட்டை துஷ்பிரயோகம் செய்பவர்களின் பிழையை ஆலோசனை சபை (சீனாட்) நிராகரிக்கிறது. இதனால் அவர்கள் பின்வரும் கருத்தை கவனக்குறைவாய் இருக்கிறவர்களுக்கும் அனுபவமற்றவர்களாக இருக்கிறவர்களுக்கும் ஊக்குவிக்கக்கூடும். "கிறிஸ்துவின் மரணத்தால் பெறப்பட்ட நன்மைகளை எல்லா மனிதர்களுக்கும் சமமாக வழங்க கடவுள் விரும்பினார்.சிலர் பாவ நிவாரணம் மற்றும் நித்திய ஜீவனில் பங்கேற்கிறார்கள். மற்றவர்கள் அவ்வாறு செய்யாமல் இருப்பது அவர்களின் சுய சித்தத்தின் சரியான பயன்பாட்டைப் பொறுத்தது. அனைவருக்கும் வழங்கப்படும் பொதுவான கிருபையை தங்களே பயன்படுத்துகிறார்கள்.இது ஒரு குறிப்பிட்ட பரிசாகிய இரக்கம் சார்ந்து திறம்பட செயல்படுவதில்லை. இதன் மூலம் அவர்கள்

மற்றவர்களை விட, இந்த கிருபையை தங்களுக்குள் பயன்படுத்துகிறார்கள்." இந்த ஆசிரியர்கள் (போதகர்கள்) இந்த வேறுபாட்டை ஒரு நல்ல வழியில் முன்வைக்கும்போது, மக்களுக்கு பெலஜியனிசத்தின் தீங்கு விளைவிக்கும் விஷத்தை கொடுக்கிறார்கள்.

7
ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
கிறிஸ்துவால் இறக்கவோ அல்லது இறக்கிற அவசியமோ இல்லை மற்றும் அவர் தேவனால் மிக உயர்ந்த அளவில் நேசித்தவர்களுக்காகவும், நித்திய ஜீவனுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்காகவும் இறக்கவில்லை. ஏனென்றால் இவர்களுக்கு கிறிஸ்துவின் மரணம் தேவையில்லை. ஆனால் கலாத்தியர் 2:20, "கிறிஸ்து என்னை அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்." என்று அறிவிக்கும் அப்போஸ்தலருக்கு எதிராக அவர்கள் முரண்படுகின்றன. அதேபோல்: "தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்." ரோமர் 8: 33,34, மேலும் இவர்களுக்காக இரட்சகர் சொல்லும் வார்த்தைகள், "ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்." யோவான் 10:15. மற்றும் "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது.ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை." யோவான் 15: 12,13.

## தலைப்பு 3&4:மனிதனின் ஊழல்(பாவ இயல்பு), அவன் கடவுளுக்காக மாறுவது மற்றும் அதன் நடத்தை

### கட்டுரை 1
மனிதன் முதலில் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டான். அவனுடைய புரிதல் அவனது படைப்பாளரைப் பற்றிய உண்மையான மற்றும் இரட்சிக்கிற அறிவால் மற்றும் ஆவிக்குறியா (ஆன்மீக) விஷயங்களால் அலங்கரிக்கப்பட்டது. அவனுடைய இருதயமும் மற்றும் சித்தமும் நேர்மையானவை; அவனுடைய அனைத்து விருப்பமும் தூய்மையானவை; மனிதன் முழுமையாக பரிசுத்தமாய் இருந்தான்.ஆனால் பிசாசின் தூண்டுதலால் கடவுளை எதிர்த்து தனது சொந்த சித்தத்தின் சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்து, அவன் இந்த சிறந்த பரிசுகளை இழந்தான்.மாறாக, அவன் மனதின் குருட்டுத்தன்மை, பயங்கரமான இருள், வீண் மற்றும் பொல்லாத தீர்ப்பு ஆகியவற்றைக் கொண்டிருந்தான். பொல்லாதவனும் , கலகக்காரனும், இருதயத்திலும் சித்தத்திலும் பிடிவாதகாரனும், அவனுடைய விருப்பங்களில் தூய்மையற்றவனாகவும் ஆனான்.

கட்டுரை 2
வீழ்ச்சிக்குப் பிறகு மனிதன் தனது சொந்த தோற்றத்தில் குழந்தைகளைப் பெற்றெடுக்கிறான். ஒரு ஊழல் (பாவ இயல்பு உடைய) தண்டு ஒரு ஊழல் (பாவ இயல்பு உடைய) சந்ததியை உருவாக்கியது. ஆகவே, ஆதாமின் அனைத்து சந்ததியினரும், கிறிஸ்துவை மட்டுமே தவிர்த்து, அவர்களின் அசல் (முதல்) பெற்றோரிடமிருந்து ஊழலைப் (பாவ இயல்பு) பெற்றிருக்கிறார்கள். இந்த ஊழல் (பாவ இயல்பு) பழங்கால பெலஜியர்கள் வலியுறுத்தியது போல, பார்த்துப் பின்பற்றுதல் மூலம் அல்ல, மாறாக தீய இயல்பைப் பிறப்பின் மூலம் பரப்புதல்.

கட்டுரை 3
ஆகையால், எல்லா மனிதர்களும் பாவத்தில் கருத்தரிக்கப்படுகிறார்கள், இயல்பாகவே கோபாக்கினையின் பிள்ளைகலாய் இருக்கிறார்கள், இரட்ச்சிக்கிற நற்கிரியைகளை செய்ய இயலாதவர்கள், தீமைக்கு சாய்ந்திருக்கிறவர்கள், பாவத்தில் இறந்தவர்கள், மற்றும் அதன் அடிமைத்தனத்தில் உள்ளவர்கள். பரிசுத்த ஆவியின் மறுஜென்ம கிருபை இல்லாமல், அவர்கள் கடவுளிடம் திரும்பவோ, அவர்களின் இயல்பின் துன்மார்க்கத்தை சீர்திருத்தவோ, தங்களை சீர்திருத்தத்திற்கு உட்படுத்தவோ முடியாது.

கட்டுரை 4
இருப்பினும்,வீழ்ச்சியிலிருந்து மனிதனில் இயற்கையான ஒளியின் ஒளிரும் தன்மைகள் உள்ளன. இதன் மூலம் அவன் கடவுளைப் பற்றியும், இயற்கையான விஷயங்களைப் பற்றியும், நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான வேறுபாடுகள் ஆகியவற்றை பற்றி சில அறிவைத் தக்க வைத்துக் கொள்கிறான். மேலும் சில நற்குணம், சமுதாயத்தில் நல்ல ஒழுங்கு, மற்றும் ஒழுங்கான வெளிப்புற ஒழுக்கத்தைப் பேணுதல் ஆகியவற்றை காண்கிறான். ஆனால் இயற்கையின் இந்த ஒளி அவனை கடவுளைப் பற்றிய இரட்சிக்கிற அறிவிற்கும் மற்றும் உண்மையான மாற்றத்திற்கும் கொண்டு வருவதற்கு போதுமானதாக இருப்பதற்கு மிக தூரமாய் இருக்கிறது. அவனால் இயற்கை மற்றும் சிவில் (சமூகத்தினரின் தனி உரிமைகள் சம்பந்தமான) விஷயங்களில் கூட அதை சரியாகப் பயன்படுத்த இயலாது.மேலும், இந்த ஒளியை மனிதன் பல்வேறு வழிகளில் முற்றிலும் அசுத்தம் படுத்துகிறான். அதை அநீதியில் வைத்திருக்கிறான். அதைச் செய்வதன் மூலம் அவன் கடவுளுக்கு முன்பாக போக்குச்சொல்ல இடமில்லாதவனாக இருக்கிறான்.

கட்டுரை 5
அதே வெளிச்சத்தில்,மோசேயின் கைகளால், கடவுளால் அவருடைய விசித்திரமான மக்களாகிய யூதர்களுக்கு வழங்கப்பட்ட பத்து கட்டளைகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.ஆகவே, அது பாவத்தின் மகத்துவத்தை காண்பித்தாலும் மற்றும் தன் பாவத்தைப்பற்றி மனிதனுக்கு மேலும் மேலும் நம்பவைத்தாலும். அது ஒரு தீர்வை சுட்டிக்காட்டவில்லை, அல்லது அவனை துயரத்திலிருந்து விடுவிப்பதற்கான பலத்தை அளிக்கவில்லை. மாம்சத்தின் மூலம் பலவீனமாக இருப்பதால், (நியாயப்பிரமாணத்தை) கட்டளைகளை மீறுபவனை சாபத்தின் கீழ் விட்டுவிடுகிறது, இந்த நியாயப்பிரமாணத்தின் மூலம் மனிதனால் இரட்சிக்கிற கிருபையைப் பெற முடியாது.

கட்டுரை 6
ஆகவே இயற்கையின் ஒளியோ, நியாயப்பிரமாணமோ செய்ய முடியாததை, கடவுள் பரிசுத்த ஆவியின் செயல்பாட்டால் செய்கிறார். வார்த்தை அல்லது ஒப்புரவாக்குதலின் ஊழியத்தின் மூலம் அதாவது மேசியாவைப் பற்றிய நற்செய்தி இது. இதன் மூலம் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் கீழ் உள்ள நம்பிக்கை (விசுவாசம்) கொண்டவர்களை இரட்சிப்பதில் கடவுளுக்கு விருப்பமாய் இருந்தது.

கட்டுரை 7
கடவுள் தம்முடைய சித்தத்தின் ரகசியத்தை பழைய ஏற்பாட்டில் சிலருக்கு வெளிப்படுத்தினார்.புதிய ஏற்பாட்டில் அவர் மக்களிடையே எந்த வேறுபாடும் இல்லாமல் பலருக்கும் அதை வெளிப்படுத்துகிறார். இந்த கவுளின் அருள் ஆட்சி முறையின் காரணம் ஒரு தேசம் மற்ற தேசத்தை விட மதிப்பில் அதிகமாகவோ அல்லது இயற்கையின் ஒளியை சிறப்பாக பயன்படுத்தவோ இல்லை.மாறாக கடவுளின் நல்ல இன்பம் மற்றும் முயற்சிகளால் சம்பாதிக்க முடியாது அன்பிலிருந்து முற்றிலும் விளைகிறது.அத்தகைய எல்லா தகுதிகளுக்கும் அப்பாற்பட்ட கிருபை யாருக்கு வழங்கப்படுகிறதோ, அவர்கள் அதை மனத்தாழ்மையுடனும் நன்றியுள்ள இருதயத்துடனும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.ஆனால் இந்த கிருபை யாருக்கு வழங்கப்படவில்லையோ அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளின் தீவிரத்தையும் நீதியையும் அப்போஸ்தலருடன் வணங்க வேண்டும், மேலும் அதை ஒருபோதும் ஆர்வத்துடன் விசாரிக்கக்கூடாது.

கட்டுரை 8
சுவிசேஷத்தால் அழைக்கப்படும் யாவரும் நேர்மையாக (உண்மையில்) அழைக்கப்படுகிறார்கள்.என்யனில் தேவன் தம்முடைய வார்த்தையில் மிக உற்சாகமாகவும் உண்மையாகவும் காட்டியுள்ளார், அவருக்குப் பிரியமானது என்னவென்றால் அழைக்கப்படுபவர்கள் அவரிடம் வர வேண்டும் என்பதே.மேலும், அவர் தம்மிடம் வந்து அவரை நம்புகிற பலருக்கும் நித்திய ஜீவனையும், ஓய்வையும் தீவிரமாக வாக்குறுதி அளிக்கிறார்.

கட்டுரை 9
சுவிசேஷ ஊழியத்தின் மூலம் அழைக்கப்படும் பலரும் வர மறுக்கிறார்கள் மற்றும் (மனம்) மாறுவதும் இல்லை. இதன் தவறு சுவிசேஷத்திலோ அல்லது சுவிசேஷத்தில் வழங்கப்பட்ட கிறிஸ்துவிலோ இல்லை மற்றும் அவர்களுக்கு பல்வேறு பரிசுகளை வழங்கி சுவிசேஷத்தின் மூலம் அவர்களை அழைக்கும் கடவுளிடமும் இல்லை.மாறாக தவறு அவர்கள் மேலேயே இருக்கிறது.அவர்களில் சிலர் அழைக்கப்படும் போது ஆபத்தைப் பொருட்படுத்தாமல் வாழ்வு தரும் வார்த்தையை நிராகரிக்கிறார்கள்.மற்றவர்கள் அதைப் பெற்றாலும், அது அவர்களின் இருதயத்தில் நீடித்த தோற்றத்தை (தாக்கத்தை) ஏற்படுத்துவதில்லை. ஆகையால் அவர்களின் மகிழ்ச்சி ஒரு தற்காலிக விசுவாசத்திலிருந்து மட்டுமே எழுகிறது. விரைவில் மறைந்துவிடும், மேலும் அவர்கள் விழுந்து போகிறார்கள். மற்றவர்கள் கடினமான கவலையுடனும், இந்த உலகத்தின் இன்பங்களுடனும் வார்த்தையின் விதைகளை நெருக்கிப்போடுக்கிறார்கள்

மற்றும் பலன் கொடுப்பதில்லை.இது நம்முடைய
இரட்சகர் விதைக்கிறவனின் உவமையில் (நமக்கு) கற்பிக்கிறார். மத்தேயு 13.

கட்டுரை 10
சுவிசேஷ ஊழியத்தின் மூலம் அழைக்கப்படும் சிலர் வருகிறார்கள் மற்றும் (மனம்) மாறவும் செய்கிறார்கள். அதன் காரணம் மனிதன் (அவர்கள்) அல்ல. விசுவாசம் மற்றும் மனமாற்றத்திற்கு சமமான அல்லது போதுமான கிருபை வழங்கப்பட்ட மற்றவர்களிடமிருந்து ஒருவன் தனது சுய விருப்பத்தால் வேறுபடுகிறான் என்பது பெலஜியஸின் பெருமைமிக்க மத கோட்பாட்டிற்கு எதிரான கொள்கை ஆகும் .மாறாக கடவுள் நித்தியத்தில் கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தேர்ந்தெடுகிறார் மற்றும் அவர்களுக்கு விசுவாசத்தையும் மனந்திரும்புதலையும் தருகிறார்.இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்துகிறார். ஆகையால் அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அவர்கள் அறிவிக்க வேண்டும்.அவர்கள் தங்களை மகிமைப்படுத்தக்கூடாது, ஆனால் பல்வேறு இடங்களில் அப்போஸ்தலர்களின் சாட்சியத்தின்படி கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும்.

கட்டுரை 11
ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் கடவுள் தமது நல்ல இன்பத்தை நிறைவேற்றுகிறார் மற்றும் அவர்களில் உண்மையான மனம் மாற்றத்தை ஏற்படுத்துகிறார்.தேவனுடைய ஆவியின் விஷயங்களை அவர்கள் சரியாகப் புரிந்துகொள்வதற்கும் மற்றும் பகுத்து அறிவதற்கும் அவர் சுவிசேஷத்தை வெளிப்புறமாக அவர்களுக்குப் பிரசங்கிப்பதோடு மட்டுமல்லாமல், அவருடைய பரிசுத்த ஆவியினால் அவர்களின் இருதயத்தில் வல்லமையாக ஒளிரச் செய்கிறார்.அதே மறுஜென்ம (மறுபடியும் பிறக்கவைக்கும்) ஆவியின் செயல்திறனால் மனிதனின் உள்ளார்ந்த பகுதியை ஊடுருவுகிறார்.அவர் மூடியதைத் திறந்து, கடினப்படுத்தப்பட்ட இருதயத்தை மென்மையாக்குகிறார், விருத்தசேதனம் செய்யப்படாததை விருத்தசேதனம் செய்கிறார், புதிய குணங்களை விருப்பத்திற்கு சித்தத்திற்கு ஊட்டுகிறார் உட்படுத்துகிறார்.இது முன்பே இறந்திருந்தாலும், அவர் அதை உயிர்ப்பிக்கிறார். தீமை, கீழ்ப்படியாத மற்றும் பயனற்றதாக இருக்கும் நிலையில் இருந்து, அவர் அதை நல்ல, கீழ்ப்படிகிற மற்றும் வளைந்து கொடுக்கும் தன்மை கொண்டதாக மாற்றுகிறார்.ஒரு நல்ல மரத்தைப் போலவே, அது நல்ல செயல்களின் (நற்கிரியைகளின்) பலனைத் தரும்படி அதைச் செயல்படுத்துகிறார் மற்றும் பலப்படுத்துகிறார்.

கட்டுரை 12
இது வேதாகமத்தில் மிகவும் கொண்டாடப்பட்ட மறுஜென்ம (மறுபடியும் பிறக்குதல்) ஆகும். மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல், (அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த கிறிஸ்துவுடனேகூட) உயிரோடு இருப்பது ஒரு புதிய படைப்பாக அறிவிக்கப்படுகிறது. இதை நம்முடைய உதவி இல்லாமல் கடவுள் நம்மில் செயல்படுகிறார்.ஆனால் இது நற்செய்தியின் வெளிப்புற

பிரசங்கத்தினாலோ, தார்மீகத் தூண்டுதலினாலோ, அல்லது அத்தகைய செயல்பாட்டு முறையினாலோ நிறைவேற்றப்படுவதில்லை. மற்றும் கடவுள் தமது பங்கைச் செய்தபின்னும் மறுபடியும் பிறப்பதும், மனம் மாறுவதும் அல்லது மனம் மாறாமல் தொடர்வதும் மனிதனுடைய சக்தியில் இல்லை. ஆனால் இது ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல், மிகவும் சக்தி வாய்ந்தது, அதே நேரத்தில் மிகவும் மகிழ்ச்சிகரமான, வியக்க வைக்கும், மர்மமான மற்றும் சொல்லில் அடங்காதது.வேதாகமத்தின் படி (இதை எழுதிய ஆசிரியரின் ஊக்கத்திலிருந்து) படைப்பின் வேலையை விட அல்லது மரித்தோரிலிருந்து எழுப்பும் வேலையை விட இது (மறுபடியும் பிறப்பது) குறைவானது அல்ல. ஆகவே, கடவுள் இந்த அற்புதமான முறையில் ஏவர்களுடைய இருதயத்தில் செயல்படுகிறரோ அவர்கள் அனைவருமே நிச்சயமாக தவறாமால் கண்டிப்பாக மறுபடியும் பிறக்கிறார்கள் , மற்றும் உண்மையில் நம்புகிறார்கள். இதன்மூலம் இவ்வாறு புதுப்பிக்கப்படும் சித்தம், கடவுளால் செயல்படுத்தப்பட்டு வழிநடத்தப்படுவது மட்டுமல்லாமல், இந்த வழிகாட்டுதலின் விளைவாக, தானாகவே செயல்படுகிறது.ஆகையால், பெறப்பட்ட கிருபையின் காரணமாக, மனிதன் தானே நம்பவும் மனந்திரும்பவும் செய்கிறான் என்று சரியாகச் சொல்லப்படுகிறது.

கட்டுரை 13

இந்த செயல்பாட்டின் விதத்தை இந்த வாழ்க்கையில் விசுவாசிகளால் முழுமையாக புரிந்து கொள்ள முடியாது. இருப்பினும் கடவுளின் இந்த கிருபையால் அவர்கள் இருதயத்தோடு நம்பவும், தங்கள் இரட்சகரை நேசிக்கவும் அவர்களுக்கு ஆற்றல் வழங்கப்படுகிறது. இதில் அவர்கள் அறிந்தும் அனுபவித்தும் திருப்தியடைகிறார்கள்.

கட்டுரை 14

ஆகவே, விசுவாசம் கடவுளின் பரிசாக கருதப்பட வேண்டும். இது மனித விருப்பத்திற்காக (ஏற்றுக்கொள்ளப்படவோ நிராகரிக்கப்படவோ) கடவுளால் வழங்கப்படுகிற ஒரு பரிசு அல்ல. மாறாக அது உண்மையில் அவனுக்கு வழங்கப்பட்டு, சுவாசிக்கப்பட்டு, அவனுக்குள் செலுத்தப்படுகிறது. இது இத்தகைய (இப்படிப்பட்ட) பரிசு அல்ல என்னவெனில் கடவுள் தன்னை நம்புவதற்கு சக்தியை அளிக்கிறார், மேலும் மனிதன் சம்மதம் தெரிவிப்பதும் , விசுவாசிக்கும் செயலைச் செய்வதும் மனிதனின் தேர்வுக்கு விட்டுவிடுகிறார். மாறாக கடவுளே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் மனிதனில் உண்டாக்குகிறார். உண்மையில், கடவுள் எல்லாவற்றிலும் செயல்படுகிறார் மற்றும் எல்லாவற்றையும் செய்கிறார்.

கட்டுரை 15

யாருக்கும் இந்த கிருபையை வழங்க கடவுள் எந்த ஒரு நன்றிக்கடன்னில் இல்லை. அத்தகைய வெகுமதிப்பின் அடித்தளமாக விலைமதிப்பற்ற பரிசுகளை வழங்காத மனிதனுக்கு அவர் எவ்வாறு கடன்பட்டிருக்க முடியும்? இல்லை, மனிதன் பாவத்தையும் பொய்யையும் தவிர தன்னிடத்தில் ஒன்றும் இல்லை (எதுவுமில்லை)? ஆகவே, அவன் இந்த கிருபையின் பொருளாகி, கடவுளுக்கு நித்திய நன்றி கடனாளியாய் இருக்கிறான் மற்றும் அவருக்கு என்றென்றும் நன்றி

செலுத்துகிறான். அதை (கிருபையை) பெறாதவன் ஆவிக்குரிய (ஆன்மீக) விஷயங்களைப் பற்றி பொருட்படுத்தாமல் (சிறிதும் கவலைப்படாமல்), அவனுடைய சொந்த நிலையில் திருப்தி அடைகிறான்; அல்லது ஆபத்தை பற்றி எந்த பயமும் இல்லாமல் இருக்கிறான் மேலும் அவன் தன்னிடம் இல்லாததை இருக்கிறது என்று வீணாகப் பெருமை கொள்கிறான். மேலும், அப்போஸ்தலர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி, வெளிப்புறமாக விசுவாசத்தை வெளிப்படுத்துபவர்களையும், வழக்கமான வாழ்க்கையை மிகவும் நேர்மறையான வழியில் வாழ்பவர்களையும் பற்றி நாம் மிகவும் சாதகமாகப் (நல்ல முறையில்) பேச வேண்டும். அவர்களின் இதயங்களின் ரகசியங்கள் நமக்குத் தெரியாது. இன்னும் அழைக்கப்படாத மற்றவர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்காக இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற கடவுளிடம் ஜெபிப்பது நம்முடைய கடமையாகும். ஆனால் நாம் நம்மை வேறுபடுத்திக் கொண்டதைப் போல பெருமிதத்தோடு அவர்களிடத்தில் ஒருவகைளும் நடக்க கூடாது.

கட்டுரை 16

வீழ்ச்சியால் (ஆதாமின் முதல் பாவத்தின் மூலம்) மனிதன் மனிதனாக இருப்பதை நிறுத்தவில்லை, மாறாக அவன் புரிதலும் சித்தமும் (விருப்பமும்) கொண்டவன். மேலும் பாவம், முழு மனித இனத்திலும் பரவி உள்ளது மற்றும் பாவம் மனித இனத்தின் தன்மையை அழிக்கவில்லை, மாறாக அதை ஒழுக்கம் வழுவச் செய்து (முற்றிலும் அசுத்தப்படுத்தி) ஆவிக்குரிய (ஆன்மீக) ரீதியில் கொன்றது. ஆகவே, ஜெநிப்பித்தலின் (மறுபடியும் பிறத்தலின்) தெய்வீக கிருபை மனிதர்களை அடிமரம் அல்லது மரத்துண்டு போல நடத்துவதில்லை, மேலும் அவர்களின் விருப்பத்தையும் மற்றும் பண்புகளையும் பறிக்கவோ அல்லது வன்முறையாகவும் விருப்பமின்றி அவர்களை கட்டாயப்படுத்தவும் இல்லை. ஆனால் இந்த கிருபை ஆவிக்குரிய (ஆன்மீக) ரீதியில் உயிர்ப்பிக்கிறது, குணப்படுத்துகிறது, சரிசெய்கிறது, ஒரே நேரத்தில் இனிமையாகவும் சக்தியுடனும் சித்தத்தை (விருப்பத்தை) நகர்த்துகிறது.முன்பதாக மாம்சத்தின் கிளர்ச்சி மற்றும் எதிர்ப்பானது சித்தத்தை (விருப்பத்தை) முழுமையாக ஆதிக்கம் செய்தது, இப்போது ஒரு தயாராக மற்றும் நேர்மையான ஆவிக்குரிய (ஆன்மீக) கீழ்ப்படிதல் அங்கு ஆட்சி செய்யத் தொடங்குகிறது.இதில் உண்மையான, ஆவிக்குரிய (ஆன்மீக) மறுசீரமைப்பு மற்றும் நமது சித்தத்தின் (விருப்பத்தின்) சுதந்திரம் ஆகியவை அடங்கும். ஆகவே, நம்மில் செய்யப்பட்ட (நம்மை மாற்றிய) ஒவ்வொரு நற்செயல்லின் போற்றத்தக்க எழுத்தாளர் (கடவுள்) இல்லாவிட்டால், மனிதன் தனது வீழ்ச்சியிலிருந்து தனது சொந்த சித்தத்தின் (விருப்பத்தின்) பேரில் மீண்டு வருவான் என்ற நம்பிக்கையை கொண்டிருக்க முடியாது, அதை துஷ்பிரயோகம் செய்வதன் மூலம், அப்பாவித்தனமான (பாவமற்ற) நிலையில் இருந்து அவன் தன்னை நாசமாக்கிக் கொண்டான்.

கட்டுரை 17
கடவுளின் சர்வ வல்லமையுள்ள செயல்பாடாக, அவர் நம் இயற்கையான வாழ்க்கையை நீட்டி ஆதரிக்கிறார். அது வழிமுறைகளின் பயன்பாட்டை தவிர்க்கவில்லை, மாறாக வழிமுறைகளைப் பயன்படுத்த அவசியமாக இருக்கிறது. இந்த வழிமுறைகளின் மூலம், கடவுள் தனது எல்லையற்ற இரக்கத்திற்கும் (கருணைக்கும்) நன்மைக்கும் ஏற்ப தனது சக்தியைப் பயன்படுத்த தேர்ந்தெடுத்துள்ளார்.அது போலவே எதற்கு முன்னல் விவரிக்கப்பட்ட கடவுளின் இந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட வேலையும் உள்ளடங்கும். இதன் மூலம் அவர் நம்மை மீண்டும் உருவாக்குகிறார் (ஜெநிப்பித்தல் /மறுபடியும் பிறத்தல்) மற்றும் இதன் மூலம் அவர் சுவிசேஷத்தின் பயன்பாட்டை விலக்கவோ அல்லது முறியடிக்கவோ (த டுக்கவோ) இல்லை. மிகவும் ஞானமுள்ள கடவுள் சுவிசேஷத்தை ஜெநிப்பித்தலுக்கும் மற்றும் ஆத்மாவின் உணவாக நியமித்தார். இந்த காரணத்திற்காக, அப்போஸ்தலர்களும் அவர்களைப் பின்தொடர்ந்த போதகர்களும் கடவுளின் இந்த கிருபையைப் பற்றி மக்களுக்கு பக்தியுடன் கற்பித்திருக்கிறார்கள். இது கடவுளின் மகிமைக்காகவும், எல்லா மனித பெருமைகளையும் இழிவுபடுத்துவதற்காகவும் கற்பிக்கப்பட்டது.மேலும், சுவிசேஷத்தின் பரிசுத்த அறிவுரைகளால், அந்த போதகர்கள் அனைவரும் மக்களை வார்த்தை, திருநியமங்கள் (சாக்கிரமெந்துகள்) மற்றும் திருச்சபை ஒழுக்கத்தின் நிர்வாகத்தின் கீழ் வைக்க புறக்கணிக்கவில்லை.ஆகவே, கடவுள் தனது நல்ல இன்பத்தால் மிகவும் வலுவாக சேர விரும்பிய விஷயங்களை பிரிப்பதன் மூலம் கடவுளைச் சோதிக்க கற்பிப்பவர்களிடமிருந்தோ அல்லது கற்பவர்களிடமிருந்தோ வரக்கூடாது.ஆகவே அறிவுரைகளின் மூலம் கிருபை வழங்கப்படுகிறது; மேலும் நாம் எவ்வளவு விரைவாக நம் கடமையைச் செய்கிறோமோ, அவ்வளவு சிறப்பாகக் கடவுளின் இந்த ஆசீர்வாதம் நம்மில் வேலைசெய்கிறது, மேலும் நேரடியாக அவருடைய பணி முன்னேறுகிறது.அவர் கொடுத்த வழிமுறைகளுக்காகவும், அவற்றின் இரட்சிக்கிற (காப்பாற்றும்) கணி மற்றும் செயல்திறனுக்காகவும் அவருக்கு மட்டுமே எல்லா மகிமையும் என்றென்றும் உண்டாவதாக. ஆமென்.

1
ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
இதை சரியாகச் சொல்ல முடியாது, அந்த முதல் பாவம் முழு மனித இனத்தையும் கண்டிக்க போதுமானது, அல்லது தற்காலிக மற்றும் நித்திய தண்டனைக்கு தகுதியானது. இந்த போதகர்கள் அப்போஸ்தலருக்கு முரணானவர்கள், ஏனெனில் ரோமர் 5:12, "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும்

பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று." மற்றும் வசனம் 16 "ஒரே குற்றத்தினிமித்தம் ஆக்கினைக்கு ஏதுவாயிருந்தது." மற்றும் "பாவத்தின் சம்பளம் மரணம்." ரோமர்(6:23)

2

ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:

ஆவிக்குரிய வரன்கள் (ஆன்மீக பரிசுகள்), அல்லது நல்ல குணங்கள் மற்றும் நல்லொழுக்கங்கள்: நன்மை, பரிசுத்தம், நீதியானது, மனிதன் முதலில் படைக்கப்பட்டபோது அவனது சித்தத்திற்கு (விருப்பத்திற்கு) உரியதாக இருக்க முடியாது. ஆகவே, மனிதனின் வீழ்ச்சியில் ( ஆதாமின் முதல் பாவம்) இவை பிரிக்கப்பட முடியாது.இது எபேசியர் 4: 24-ல் அப்போஸ்தலன் கொடுக்கும் கடவுளின் சாயலின் விளக்கத்திற்கு முரணானது. அங்கு அது நீதியிலும் பரிசுத்தத்திலும் அடங்குவதாக அறிவிக்கிறது, இது சந்தேகத்திற்கு இடமின்றி சித்தத்திற்கு (விருப்பத்திற்கு) சொந்தமானது.

3

ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:

ஆவிக்குரிய (ஆன்மீக) மரணத்தில் ஆவிக்குரிய (ஆன்மீக) பரிசுகள் மனிதனின் சித்தத்திலிருந்து (விருப்பத்திலிருந்து) பிரிக்கப்படவில்லை. ஏனென்றால் சித்தம் (விருப்பம்) ஒருபோதும் கெட்டுப்போகவில்லை. ஆனால் அது மனதின் இருள் மற்றும் பாசங்களின் (ஆசைகளின்) ஒழுங்கற்ற தன்மை ஆகியவற்றால் மட்டுமே தடுக்கப்படுகிறது. மேலும், இந்த இடையூறுகள் அகற்றப்பட்டால், சித்தம் (விருப்பம்) அதன் சொந்த சக்திகளை செயல்படுத்த முடியும். அதாவது, அதற்கு முன்னால் உள்ள நல்லதை அது தேர்வு செய்யவோ அல்லது தேர்வு செய்யாமல் போகவோ முடியும். இது ஒரு புதுமை மற்றும் பிழை, இது தீர்க்கதரிசி எரேமியா, "எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது" (எரேமியா 17:9) கூறியதற்கு மாறாக சுதந்திர சித்தத்தின் (விருப்பத்தின்) வல்லமைகளை உயர்த்த வழிவகுக்கிறது. மேலும் இது அப்போஸ்தலன் பவுல், "அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்" (எபேசியர் 2:3) கூறியதற்கு மாறாக இருக்கிறது.

4

ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:

ஆவியினால் மீண்டும் பிறக்காத (மறுஜென்மமுழுக்கு/ மறுஜென்மம்) மனிதன் உண்மையில் பாவத்தில் இறந்தவனல்ல மற்றும் ஆன்மீக (ஆவிக்குரிய) நன்மைக்களை செய்வதற்கு எல்லா சக்திகளையும்

இழந்தவனல்ல. ஆனால் அவன் இன்னும் நீதிக்கும் வாழ்க்கைக்காக பசியும் தாகமும் கொள்ள முடியும். மேலும் கடவுளுக்குப் பிரியமான நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான ஆவியின் பலியை வழங்க முடியும். இவை வேதத்தின் வெளிப்படையான சாட்சியத்திற்கு முரணானவை. "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை." (எபேசியர் 2:1, 5) மற்றும் "மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள்
அவன் சிறுவயதுதொடங்கி நித்தமும் பொல்லாததாயிருக்கிறது." (ஆதியாகமம் 6:5; 8:21)

5

ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
பாவம் நிறைந்த மற்றும் இயற்கையான (ஆதாமில் இருக்கும்) மனிதன் பொதுவான கிருபையை நன்றாகப் பயன்படுத்த முடியும். இதன் மூலம் இயற்கையின் ஒளியை அல்லது வீழ்ச்சிக்குப் பிறகு இருக்கிற பரிசுகளை உபயோகிக்க முடியும். மேலும் அவன் அவற்றின் நல்ல பயன்பாட்டின் மூலம் படிப்படியாக சுவிசேஷம் அல்லது இரட்சிக்கிற கிருபையும் மற்றும் இரட்சிப்பும் பெற முடியும். இந்த வழியில் மூலம் கடவுள் தன் பங்கில் கிறிஸ்துவை எல்லா மனிதர்களுக்கும் வெளிப்படுத்தத் தயாராக இருப்பதைக் காட்டுகிறார். ஏனென்றால் அவர் அன்னைவரையும் மாற்றுவதற்கு போதுமான மற்றும் திறமையாக வழிமுறைகளைப் பயன்படுத்துகிறார். எல்லா நேரங்களின் அனுபவத்திற்கும், வேதவசனங்களும் இது பொய் என்று சாட்சியமளிக்கின்றன."யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களையும், இஸ்ரவேலுக்குத் தமது பிரமாணங்களையும் தமது நியாயங்களையும் அறிவிக்கிறார். அவர் வேறே எந்த ஜாதிக்கும் இப்படிச் செய்ததில்லை; அவருடைய நியாயங்களை அறியாமற்போகிறார்கள்"(சங்கீதம் 147:19-20). " சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தும் " (அப்போஸ்தலர் 14:16). "அவர்கள் (பவுலும் அவரது தோழர்களும்) பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்தஆவியினாலே தடைபண்ணப்பட்டு,மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம்பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்"(அப்போஸ்தலர் 16:6-7).

6

ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
மனிதனின் உண்மையான மாற்றத்தில் (மனமாற்றத்தில்) புதிய குணங்கள், சக்திகள் அல்லது பரிசுகள் எதுவும் கடவுளால் மனிதனின்

விருப்பத்திற்கு (சித்தத்திற்கு) உட்புகுத்தப்பட முடியாது. ஆகவே, நாம் முதலில் மாற்றப்பட்ட விசுவாசத்தின் காரணமாக நாம் விசுவாசிகள் என்று அழைக்கப்படுகிறோம். இது கடவுளால் உட்புகுத்தப்படுத்தப்பட்ட ஒரு குணம் அல்லது பரிசு அல்ல. இந்த விசுவாசத்தை அடைவதற்கான சக்தியைத் தவிர்த்து மனமாற்றம் மனிதனின் செயல் மட்டுமே. இது ஒரு பரிசு என்று சொல்ல முடியாது. இதன்மூலம் அவர்கள் பரிசுத்த வேதாகமத்திற்கு முரணானவர்கள். பரிசுத்த வேதாகமம் கடவுள் விசுவாசம், கீழ்ப்படிதல் மற்றும் அவருடைய அன்பை உணரும் புதிய குணங்களை நம் இருதயங்களுக்குள் செலுத்துகிறது என்று அறிவிக்கிறது. "நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி" (எரேமியா 31:33). "தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்" (ஏசாயா 44:3)."மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால்" (ரோமர் 5:5). திருச்சபையின் தொடர்ச்சியான நடைமுறைக்கு இது அருவருப்பானது, மற்றும் திருச்சபை தீர்க்கதரிசியை போல் இவ்வாறு ஜெபிக்கிறது: "என்னைத் திருப்பும், அப்பொழுது திருப்பப்படுவேன்" (எரேமியா 31:18).

7

ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:

நாம் கடவுளாக மாற்றப்படும் கிருபை ஒரு மென்மையான அறிவுரை மட்டுமே. மற்றவர்கள் அதை விளக்குவது போல், இது மனிதனை மாற்றுவதில் உன்னதமான முறையில் செயல்படுவதாகவும், மேலும் இந்த வழிமுறையானது அறிவுறுத்துவதில் அடங்கும். மனிதனின் இயல்புக்கு இசைவாக; இயற்கையான (ஆதாமில் இருக்கும்)மனிதனை ஆன்மீகமாக்குவதற்கு (ஆவிக்குரியவனாகக் ஆக்குவதற்கு) இந்த அறிவுறுத்தும் கிருபை மட்டும் போதுமானதாக இருக்கக்கூடாது என்பதற்கு எந்த காரணமும் இல்லை. உண்மையில், இந்த வகையான ஆலோசனையின் மூலம் தவிர, விருப்பத்தின் (சித்தத்தின்) சம்மதத்தை கடவுள் உருவாக்கவில்லை; தெய்வீக வேலையின் சக்தி, அது சாத்தானின் வேலையை விட அதிகமாக உள்ளது. இதில் கடவுள் நித்திய நன்மைகளுக்கு வாக்குறுதி அளிக்கிறார், அதே நேரத்தில் சாத்தான் தற்காலிக நன்மைகளுக்கு மட்டுமே வாக்குறுதி அளிக்கிறான்.ஆனால் இது ஒட்டுமொத்தமாக பெலஜியன் மற்றும் முழு வேதத்திற்கும் முரணானது. இதை தவிர, வேதாகமம் எசேக்கியேலைப் போலவே, மனிதனை மாற்றுவதில் (மனமாற்றுவதில்) பரிசுத்த ஆவியானவர் செயல்படும் மற்றொரு மிகவும் சக்திவாய்ந்த மற்றும் தெய்வீக முறையை

கற்பிக்கிறது:"உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்" எசேக்கியேல் 36:26

8
ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
மனிதனின்மறுஜென்மம்த்தில் (ஆவியினால் மீண்டும் பிறத்தல்) கடவுள் தனது சர்வ வல்லமையின் சக்தியை மனிதனின் விருப்பத்தை (சித்தத்தை) விசுவாசத்திற்கும் மனமாற்றத்திற்கும் ஆற்றலுடனும் மற்றும் பிழையின்றி திருப்புவதற்கு பயன்படுத்துவதில்லை. ஆனால் மனிதனை மாற்றுவதற்கு கடவுள் பயன்படுத்தும் கிருபையின் அனைத்து செயல்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. மனிதனின் மறுஜென்மம்த்தில் (ஆவியினால் மீண்டும் பிறத்தல்) மற்றும் அவனை மறுபடியும் பிறக்க செய்ய கடவுள் விரும்பும்போது, மனிதன் கடவுளையும் பரிசுத்த ஆவியையும் எதிர்க்கக்கூடும். உண்மையில் அந்த மனிதன் அடிக்கடி எதிர்க்கிறான், அவன் மறுபடியும் பிறக்க (மறுஜென்மம்) செய்வதைத் தடுக்கிறான். எனவே மறுபடியும் பிறப்பதோ (மறுஜென்மம் அடுப்பதோ) அல்லது பிறக்காமல் போவதோ என்பது மனிதனின் சக்தியில் உள்ளது. இது நம்முடைய மனமாற்றத்தில் கடவுளின் கிருபையின் அனைத்து செயல்திறனையும் மறுப்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.இது சர்வவல்லமையுள்ள கடவுளின் வேலையை மனிதனின் விருப்பத்திற்கு உட்படுத்துகிறது மற்றும் இது அப்போஸ்தலர்களுக்கு முரணானது, அவர்கள் இவ்வாறு கற்பிக்கிறார்கள், "தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன்" (எபேசியர் 1:19). மற்றும் "நம்முடைய தேவன் உங்களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும், தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறோம்" (2 தெசலோனிக்கேயர் 1:12). மேலும் "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி" (2 பேதுரு 1:3)

9
ஆலோசனை சபை (சீனாட்)  கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
கிருபை மற்றும் சுய சித்தம் (விருப்பம்)  ஆகியவை பகுதியளவு காரணங்களாகும், அவை மனமாற்றத்தின் தொடக்கத்தில் செயல்படுகின்றன. அந்த கிருபை சுய சித்தத்தின் செயல்திறனுக்கான காரணத்தில் முன்னதாக இல்லை. அதாவது, மனிதனின் சித்தம் நகரும் வரை  மற்றும் இதைச் செய்ய தீர்மானிக்கும் வரை கடவுள் மனிதனின் விருப்பத்தை மாற்றத்திற்கு திறமையாக உதவுவதில்லை. அப்போஸ்தலரின் வார்த்தைகளின்படி பெலஜியர்களின் இந்த கோட்பாட்டை ஆதி திருச்சபை வெகு காலத்திற்கு முன்பே கண்டனம் செய்துள்ளது:"ஆகையால் விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்"(ரோமர் 9:16)."அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?" (1 கொரிந்தியர் 4:7). மேலும் "ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" (பிலிப்பியர் 2:3).

## தலைப்பு 5: பரிசுத்தவான்களின் நிலைநிற்பு

### கட்டுரை 1
கடவுள் தம்முடைய குமாரனாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கூட்டுறவுக்கு (ஒற்றுமைக்கு) அவருடைய நோக்கத்தின்படி அழைக்கிறார் மற்றும் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறக்க (மறுஜென்மமுழுக்கு/மறுஜென்மம்) செய்கிறார். அவர் இந்த வாழ்க்கையில் பாவத்தின் ஆதிக்கம் மற்றும் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கிறார். அனால் அவர் இந்த உலகில் தொடரும் வரை அவர்களை பாவத்தின் உடலிலிருந்தும், மாம்சத்தின் பலவீனங்களிலிருந்தும் முற்றிலும் விடுவிப்பதில்லை.

### கட்டுரை 2
இந்த தொடர்ச்சியான பாவத்திலிருந்து, பலவீனத்தின் தினசரி பாவங்கள் எழுகின்றன, மேலும் பரிசுத்தவான்களின் சிறந்த செயல்களைக் கூட இந்த கறைகள் (மாசுகள்) ஒட்டிக்கொள்கின்றன. இந்த பாவங்களும் மற்றும் கறைகளும் பரிசுத்தவான்களை  கடவுளுக்கு முன்பாக தங்களைத் தாழ்த்திக் கொள்ளவும், சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவிடம் அடைக்கலம் பெறவும் ஒரு நிலையான காரணத்தை அளிக்கின்றன.பரிசுத்தவான்கள் ஜெப ஆவியின் மூலமாகவும், பரிசுத்த தெய்வ பக்தியின் மூலமாகவும் மாம்சத்தை மேலும் மேலும் கொல்ல முற்படுகிறார்கள்.இந்த மரண உடலில் இருந்து

விடுவிக்கப்படும் வரை அவர்கள் முழுமையின் (பரிபூரணத்தின்) குறிக்கோளுக்காக ஏங்குகிறார்கள்,அவர்கள் பரலோகத்தில் கடவுளின் (தேவ) ஆட்டுக்குட்டியுடன் ஆட்சி செய்ய கொண்டு வரப்படுகிறார்கள்.

கட்டுரை 3
இந்த பாவத்தின் எச்சங்கள்(மீந்த பகுதி) மற்றும் பாவத்தின் தூண்டுதல்கள் மற்றும் உலகத்தின் சோதனைகள் காரணமாக, மாற்றப்பட்டவர்கள் தங்கள் சொந்த பலத்திற்கு விடப்பட்டால், கிருபையின் நிலையில் விடாமுயற்சியுடன் இருக்க முடியாது. ஆனால் கடவுள் உண்மையுள்ளவர், அவர் கிருபையை வழங்கியவர், இரக்கத்துடன் உறுதிசெய்கிறார், மற்றும் அவர் மாற்றப்பட்டவர்களை இறுதிவரை கூட சக்திவாய்ந்த முறையில் பாதுகாக்கிறார்.

கட்டுரை 4
மாம்சத்தின் பலவீனம் கடவுளின் சக்திக்கு எதிராக மேலோங்க முடியாது மேலும் அது உண்மையான விசுவாசிகளை கிருபையின் நிலையில் உறுதிப்படுத்தி பாதுகாக்கும்.ஆயினும் மாற்றப்பட்டவர்கள் எப்போதும் கடவுளுடைய ஆவியால் வழிநடத்தப்படுவதில்லை,சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில், தெய்வீக கிருபையின் வழிகாட்டுதலில் இருந்து விலகி,அவர்கள் மாம்சத்தின் ஆசைகளால் மயங்கி அவைகளை திருப்திப்படுத்தலாம்.இந்த காரணத்திற்காக, அவர்கள் சோதனைக்குட்படாதபடிக்கு அவர்கள் எப்போதும் தங்களைக் கவனித்து (விழித்திருந்து) ஜெபிக்க வேண்டும்.இதைச் செய்யாதபோது, அவர்கள் சாதனாலும் , உலகத்தாலும், மாம்சத்தாலும் கடுமையான மற்றும் பயங்கரமான பாவங்களுக்குள் இழுத்துச் செல்லப்பட முடியும். உண்மையில் சில சமயங்களில் கடவுளின் நீதியான அனுமதியால் இந்த தீமைகளில் அவர்கள் விழுகின்றார்கள். பரிசுத்த வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி தாவீது, பேதுரு மற்றும் பிற பரிசுத்தவான்களின் கவலைக்குரிய வீழ்ச்சியின் மூலம் இது நிரூபிக்கப்படுகிறது.

கட்டுரை 5
இருப்பினும், இத்தகைய மகத்தான பாவங்களால், அவர்கள் கடவுளை மிகவும் புண்படுத்துகிறார்கள், ஒரு கொடிய குற்றத்தை அனுபவிக்கிறார்கள், பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துகிறார்கள், விசுவாசத்தை பயன்படுத்துவதில் குறுக்கிடுகிறார்கள், தங்கள் மனசாட்சியை மிகவும் மோசமாக காயப்படுத்துகிறார்கள்.சில சமயங்களில், அவர்கள் மனமார்ந்த மனந்திரும்புதலின் சரியான வழியில் திரும்பும் வரை, கடவுளின் தயவின் உணர்வை இழக்கிறார்கள், மனந்திரும்புவதின் மூலம் கடவுளின் தந்தையின் முகத்தின் ஒளி மீண்டும் அவர்கள் மீது பிரகாசிக்கிறது.

கட்டுரை 6
ஆனால், கடவுள் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய், தனது மாறாத தேர்தல் (தெரிந்துகொள்ளுதலின்) நோக்கத்தின்படி, அவர்களின் கவலைக்குரிய வீழ்ச்சியிலும் கூட பரிசுத்த ஆவியானவரை தனது சொந்த மக்களிடமிருந்து முற்றிலுமாக விலக்குவதில்லை. மற்றும் அவர்களின் தத்தெடுப்பின் கிருபையையோ அல்லது நியாயப்படுத்தும் நிலையையோ இழக்க விடமாட்டார்.அவர் அவர்களை மரணத்துக்கு ஏதுவான பாவத்தை

செய்யவோ  அல்லது பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவத்திற்கோ செய்ய அனுமதிக்க மாட்டார். மாற்றும் அவர் அவர்களை முற்றிலுமாக கைவிடவும், தங்களை நித்திய அழிவுக்குள்ளாக்கவும்  அனுமதிக்க மாட்டார்.

கட்டுரை 7

முதலில், இந்த வீழ்ச்சிகளில் அழிந்துபோகாமல் அல்லது முற்றிலுமாக  இழந்துபோவதிலிருந்து மறுபடியும் ஜெநிப்பிக்கிற  அழிவில்லாத வித்தினாலே அவர் அவர்களைப் பாதுகாக்கிறார்; மீண்டும், அவருடைய வார்த்தையினாலும் ஆவியினாலும், அவர்கள் மனந்திரும்புதலுக்காகவும், அவர்கள் செய்த பாவங்களுக்காக ஒரு இதயப்பூர்வமான மற்றும்  தேவனுக்கேற்ற துக்கத்திற்கும் அவர்களை நிச்சயமாகவும் திறம்படவும் புதுப்பிக்கிறார். மேலும் அவர்கள் மத்தியஸ்தரின் இரத்தத்தில் நிவாரணம் பெறவும், சமரசம் (ஒப்புரவாக்குதல்) செய்யக்கூடிய கடவுளின் தயவை மீண்டும் அனுபவிக்கவும், விசுவாசத்தின் மூலம் அவருடைய இரக்கத்தை வணங்க செய்கிறார். மற்றும் இனிமேல் அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் தங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுவார்கள்.

கட்டுரை 8

ஆகவே, அவர்கள் தங்கள் சொந்த தகுதி அல்லது வலிமையின் விளைவாக அல்ல, ஆனால் கடவுளின் இலவச கருணையால், அவர்கள் விசுவாசத்திலிருந்தும் கிருபையிலிருந்தும் முற்றிலுமாக விழுவதில்லை, மாற்றும்  அவர்களின் பின்மாற்றத்தில் (சீர்கேட்டில்)  இறுதியாக அழிந்து  போவதில்லை. இத்தகைய இழப்பு நிகழலாம் என்பது மட்டுமல்ல, சந்தேகத்திற்கு இடமின்றி தங்களைப் பொறுத்தவரை நிகழும். ஆனால் கடவுளைப் பொறுத்தவரை, அது முற்றிலும் சாத்தியமற்றது, ஏனென்றால் அவருடைய ஆலோசனையை மாற்ற முடியாது, அவருடைய வாக்குறுதியும் தோல்வியடையாது, மாற்றும்  அவருடைய நோக்கத்தின்படி (தீர்மானத்தின்படி) அழைப்பை ரத்து செய்ய முடியாது.கூடுதலாக, கிறிஸ்துவின் ஜெபமும்  பாதுகாப்பும் பயனற்றதாக மாற்றப்பட முடியாது, மற்றும் பரிசுத்த ஆவியின் முத்திரையை  விரக்தியடையவோ அல்லது அழிக்கப்படவோ முடியாது.

கட்டுரை  9

இந்த இரட்சிப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது பற்றியும், விசுவாசத்தில் அவர்கள் நிலைநிற்பது பற்றியும், உண்மையான விசுவாசிகள் தங்களைத் தாங்களே விசுவாசத்தின் அளவிற்கு ஏற்ப உறுதியைப் (நம்பிக்கையைப்) பெற வேண்டும்.அந்த விசுவாசத்தினால், அவர்கள் எப்போதுமே திருச்சபையின் உண்மையான மற்றும் உயிருள்ள உறுப்பினர்களைத் தொடருவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறார்கள்; அவர்கள் பாவ மன்னிப்பை அனுபவிக்கிறார்கள், கடைசியில் நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

கட்டுரை 10

எவ்வாறாயினும், இந்த உத்தரவாதம், கடவுளுடைய வார்த்தைக்கு முரணான அல்லது சுயாதீனமான எந்தவொரு விசித்திரமான வெளிப்பாட்டினாலும் உருவாக்கப்படவில்லை; ஆனால் தேவனுடைய வாக்குறுதிகள் மீதான

விசுவாசத்திலிருந்து வருகிறது, நம்முடைய ஆறுதலுக்காக அவர் தம்முடைய வார்த்தையில் மிக அதிகமாக வெளிப்படுத்தியுள்ளார்; பரிசுத்த ஆவியின் சாட்சியத்திலிருந்து, நாம் தேவனுடைய பிள்ளைகள் மற்றும் வாரிசுகள் என்று அவர் நம்முடைய ஆவியால் சாட்சி கூறுகிறார், ரோமர் 8:16; கடைசியாக, இது ஒரு நல்ல மனசாட்சியைப் பாதுகாப்பதற்கும், நல்ல செயல்களைச் செய்வதற்கும் ஒரு தீவிரமான மற்றும் பரிசுத்தமான விருப்பத்திலிருந்து வருகிறது.கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இறுதியாக வெற்றியைப் பெறுவார்கள் என்ற இந்த திடமான ஆறுதலையும், நித்திய மகிமைக்கான இந்த உத்தரவாதத்தையும் இழந்துவிட்டால், அவர்கள் எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்பார்கள்.

கட்டுரை 11
மேலும், இந்த வாழ்க்கையில் விசுவாசிகள் பல்வேறு சரீர சந்தேகங்களுடன் போராட வேண்டும் என்று வேதாகமம் சாட்சியமளிக்கிறது. மாற்றும் மிகுந்த சோதனையில் விசுவாசத்தின் இந்த முழு உறுதியையும் கடைசிவரை நிலைநிற்பின் உறுதியையும் அவர்கள் எப்போதும் அனுபவிக்க மாட்டார்கள்.ஆனால், எல்லா ஆறுதல்களுக்கும் பிதாவான கடவுள்,திராணிக்கு மேலாக அவர்களை சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் (1 கொரிந்தியர் 10:13). பரிசுத்த ஆவியினால் அவர் கடைசிவரை நிலைநிற்பின் உறுதியை அவர்களுக்குள் மீண்டும் எழுப்புவார்.

கட்டுரை 12
எவ்வாறாயினும், கடைசிவரை நிலைநிற்பின் இந்த உறுதியானது, விசுவாசிகளை பெருமைப்படுத்துவதில்லை, அல்லது மாமிச பாதுகாப்பை தருவதும் இல்லை. மாறாக, இது மனத்தாழ்மை, நேர்மையான பயபக்தி, உண்மையான பக்தி, ஒவ்வொரு உபத்திரவத்திலும் பொறுமை, தீவிரமான ஜெபங்கள், துன்பத்தில் நிலைத்திருத்தல், சத்தியத்தை ஒப்புக்கொள்வது மற்றும் கடவுளில் திடமான மகிழ்ச்சி ஆகியவற்றின் உண்மையான ஆதாரமாகும் (ஆரம்ப ஸ்தானம் ஆகும்). ஆகவே, இந்த நன்மையைக் கருத்தில் கொள்வதன் மூலம் நன்றியுணர்வு மற்றும் நல்ல செயல்களை தீவிரமாகவும் மற்றும் நிலையாகவும் நடைமுறைப்படுத்த ஊக்கமளிக்கிறது. வேதத்தின் சாட்சியங்களிலிருந்தும், பரிசுத்தவான்களின் உதாரணங்களிலிருந்தும் இவ்வாரே காணப்படுகிறது.

கட்டுரை 13
புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை அல்லது கடைசிவரை நிலைநிற்பின் போதனை காமவிகாரத்தை அல்லது பின்வாங்குவதிலிருந்து மீண்டு வருபவர்களிடத்தில் அவர்கள் பக்தியைப் (தேவபயத்தை) புறக்கணிக்க செய்வதில்லை. ஆனால் அது கர்த்தருடைய வழிகளில் தொடர அவர்களை மிகவும் கவனமாகவும் ஆவலாகவும் ஆக்குகிறது. ஏனெனில் அதில் நடக்கும்படி கடவுள் நியமித்துள்ளார். இதன் மூலம், அவர்கள் விடாமுயற்சியின் உறுதியை தக்க வைத்துக் கொள்கிறார்கள், மேலும் அவர்களுடைய தந்தையின் தயவை துஷ்பிரயோகம் செய்வதன் மூலம், கடவுள் தம்முடைய கிருபையான முகத்தை அவர்களிடமிருந்து விலக்கிவிடக்கூடாது என்று

பயப்படுவார்கள். தேவபக்தியுள்ளவர்களுக்கு கடவுளின் முகத்தைப் பார்ப்பது உயிரை விட சுவையானது மற்றும் கடவுளின் முகத்தைப் பாராமல் இருப்பது மரணத்தை விட கசப்பானது. இதன் விளைவாக அவர்கள் மனசாட்சி கடுமையான வேதனைகளில் விழுகிறது.

கட்டுரை 14
சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன் மூலம் கடவுள் தம்முடைய கிருபையின் வேலையை நம்மில் ஆரம்பிக்க சித்தமாய் இருந்தார். ஆகவே, இந்த வேலையை அதன் அறிவுரைகள், அச்சுறுத்தல்கள் மற்றும் வாக்குறுதிகள் ஆகியவற்றைக் கேட்பது, வாசிப்பது மற்றும் தியானிப்பதன் மூலம் மற்றும் திருநியமங்கள் (சாக்கிரமெந்துகள்) பயன்பாட்டின் மூலம் அவர் பாதுகாக்கிறார், தொடர்கிறார், முடிக்கிறார்.

கட்டுரை 15
பரிசுத்தவான்களின் நிலைநிற்பு இந்த கோட்பாட்டையும், அதன் உறுதியையும் மாம்சசிந்தை புரிந்து கொள்ள முடியவில்லை; தேவன் தம்முடைய நாமத்தின் மகிமைக்காகவும், பக்தியுள்ள ஆத்மாக்களின் ஆறுதலுக்காகவும், உண்மையுள்ளவர்களின் இருதயங்களில் அவர் ஈர்க்கும் காரணங்களுக்காகவும் அவருடைய வார்த்தையில் மிக அதிகமாக வெளிப்படுத்தியுள்ளார்.சாத்தான் அதை வெறுக்கிறான்; உலகம் அதை கேலி செய்கிறது; அறியாமைக்காரர்கள் மற்றும் நயவஞ்சகர்கள் (மாயக்காரர்கள்) துஷ்பிரயோகம் செய்கிறார்கள், மற்றும் கிறிஸ்தவ போதனைக்கு எதிரான கொள்கையில் பற்றுடையவர்கள் அதை எதிர்க்கிறார்கள்; ஆனால் கிறிஸ்துவின் துணைவியார் (மணவாட்டி திருச்சபை) அதை எப்போதும் ஒரு விலைகடந்த புதையலாக மிக மென்மையாக நேசித்து மற்றும் தொடர்ந்து பாதுகாத்து வருகிறது.கடவுள், அவருக்கு எதிராக ஆலோசனையோ வலிமையோ வெற்றிபெற முடியாது, இந்த நடத்தை இறுதிவரை தொடர அவளை ஊக்குவிப்பர். இப்போது, இந்த ஒரே கடவுளான பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருக்கு கனமும் மகிமையாகவும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்.

1
ஆலோசனை சபை (சீனாட்) கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:
உண்மையான விசுவாசிகளின் நிலைநிற்பு என்பது தேர்தலின் (தெரிந்துகொள்ளப்படுதலின்) கனி அல்ல, மற்றும் கிறிஸ்துவின் மரணத்தால் பெறப்பட்ட கடவுளின் பரிசும் அல்ல. மாறாக புதிய உடன்படிக்கையின் ஒரு நிபந்தனையாகும், இதில் மனிதன் தனது 'தீர்க்கமான' (அவர்கள் சொல்லும்படி) தேர்தல் (தெரிந்துகொள்ளப்படுதல்) மற்றும் நியாயப்படுத்தலுக்கு முன் தனது சுதந்திர விருப்பத்தால் (சுய சித்ததால்) நிறைவேற்ற வேண்டும்.தேர்தலில் (தெரிந்துகொள்ளப்படுதலில்) இருந்து நிலைநிற்பு பின்பற்றுகிறது என்பதையும், கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் வேண்டுதல்செய்யும் சக்தி (வல்லமை) தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதையும் பரிசுத்த வேதாகமம்

சாட்சியமளிக்கிறது."தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள்; மற்றவர்கள் இன்றையத்தினம்வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்." (ரோமர்11:7) மேலும், " தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?" (ரோமர் 8:32-34,36)

2

ஆலோசனை சபை (சீனாட்)  கீழ்வருகிற  கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:

கடவுள் உண்மையிலேயே விசுவாசிக்கு நிலைநிற்பதில் போதுமான சக்திகளை (வல்லமையை) வழங்குகிறார், மேலும் அவர் (விசுவாசி) தனது கடமையைச் செய்தால், அவர்களை கடவுள் தன்னுள்  பாதுகாக்க எப்போதும் தயாராக இருக்கிறார். அனைவரும் விசுவாசத்தில் நிலைநிற்பதற்கும், விசுவாசத்தைப் பாதுகாப்பதற்கும் தேவையான அனைத்து விஷயங்களும்  கடவுள் செய்த்துள்ளார்.ஆனால் நிலைநிற்பது  எப்போதும் மனிதனின் விருப்பத்தைத் (சுய சித்தத்தை) தேர்ந்தெடுப்பதைப் பொறுத்தது, அவன் நிலைநிற்பதும் நிலைநிற்காமல் போவதும்.இந்த யோசனையில் வெளிப்படையாக  பெலஜியனிசம் உள்ளது, அது மனிதர்களை  சுகந்திரவாளிகளாக  ஆக்கும். அதே வேளையில், அது அவர்களை கடவுளின் கனத்தை  கொள்ளை அடிக்கிறவர்களாக  ஆக்குகிறது. இது  சுவிசேஷக் கோட்பாட்டின் நடைமுறையில் உள்ள உடன்படிக்கைக்கு மாறானது.சுவிசேஷக் கோட்பாடு மனிதனிடமிருந்து பெருமை பேசுவதற்கான அனைத்து காரணங்களையும் எடுத்துக்கொள்கிறது, மேலும் இதற்கான எல்லா புகழையும் கடவுளின் கிருபைக்கு மட்டுமே தருகிறது.மற்றும் இது அப்போஸ்தலருக்கு மாறாகவும் இருக்கிறது, அவர் அறிவிக்கிறார் "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்." 1 கொரிந்தியர் 1:8

3

ஆலோசனை சபை (சீனாட்)  கீழ்வருகிற  கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:

உண்மையான விசுவாசிகள் மற்றும் மறுபடியும் பிறந்தவர்கள்   நியாயப்படுத்தும் விசுவாசத்தில் இருந்து விழு கூடும்.

அதேபோல் கிருபையிலிருந்தும் இரட்சிப்பிலிருந்தும் முற்றிலும் விழு கூடும் மற்றும்  உண்மையில் பெரும்பாலும் இதிலிருந்து விழுந்து என்றென்றும்  அழிந்துபோவார்கள். இந்த கருத்தாக்கம்  கிருபை, நியாயப்படுத்துதல், மீளுருவாக்கம் (மறுபடியும் பிறத்தல்) மற்றும் கிறிஸ்துவின் தொடர் பாதுகாத்தல்  ஆகியவற்றை சக்தியற்றதாக ஆக்குகிறது. அப்போஸ்தலன் பவுலின் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகளுக்கு மாறானது  "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.  இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே." ரோமர் 5:8-9. மற்றும் அப்போஸ்தலன் யோவானுக்கு மாறானது "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்." 1 யோவான் 3:9.மற்றும் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கும் முரணானது "நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை.அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது." யோவான் 10:28-29

4

ஆலோசனை சபை (சீனாட்)  கீழ்வருகிற கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:

உண்மையான விசுவாசிகளும்  மற்றும் மறுபடியும் பிறந்தவர்களும்   மரணத்திற்கு ஏதுவான பாவத்தை  அல்லது பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவத்தை செய்யக் கூடும்.ஏனெனில் அதே அப்போஸ்தலன் யோவான்  தனது முதல் நிருபத்தின் ஐந்தாவது அத்தியாயத்தில் (அதிகாரத்தில்) வசனங்கள்  16 மற்றும் 17லில்   "மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக்குறித்து வேண்டுதல்செய்ய நான் சொல்லேன்." பேசிய பிறகு உடனடியாக 18 ஆவது வசனத்தில் இதைச் சேர்க்கிறார், "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம் [அர்த்தம்: மரணத்துக்கு ஏதுவான பாவம் செய்ய மாட்டான்]; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்."

5

ஆலோசனை சபை (சீனாட்)  கீழ்வருகிற  கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:

ஒரு சிறப்பு வெளிப்பாடு இல்லாமல் இந்த வாழ்க்கையில் நிகழ்காலத்திலும்  மற்றும்  எதிர்காலத்திலும் கடைசிவரை நிலை நிற்போம் என்று நாம் உறுதியாக இருக்க முடியாது. இந்த கோட்பாட்டின் மூலம் அனைத்து விசுவாசிகளின் உறுதியான ஆறுதல் இந்த வாழ்க்கையில்

இருந்து  பறிக்கப்படுகிறது, மேலும் ரோமன் கத்தோலிக்க சந்தேகங்கள் மீண்டும் தேவாலயத்தில் அறிமுகப்படுத்தப்படுகின்றன.பரிசுத்த வேதாகமம் தொடர்ந்து இந்த உத்தரவாதத்தை ஒரு சிறப்பு மற்றும் அசாதாரண வெளிப்பாட்டிலிருந்து அல்ல, மாறாக கடவுளுடைய பிள்ளைகளுக்கு சரியான அறிகுறிகளிலிருந்தும், கடவுளின் நிலையான வாக்குறுதிகளிலிருந்தும் விலக்குகிறது. எனவே குறிப்பாக அப்போஸ்தலன் பவுல், "உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" ரோமர் 8:39. மற்றும் யோவான் அறிவிக்கிறார்: "அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்; அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்" I யோவான் 3:24

6

ஆலோசனை சபை (சீனாட்)  கீழ்வருகிற  கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக் குகிறது:

கடைசிவரை நிலை நிறுத்தல் என்கிற  உறுதியான கோட்பாடும் மேலும் இரட்சிப்பும்  மற்றும்  அதன் சொந்த தன்மையும்  மற்றும் இயற்கையும்   சோம்பேறித்தனத்திற்கு காரணமாகும். மேலும் இது தெய்வபக்தி, நல்ல ஒழுக்கங்கள், பிரார்த்தனைகள் [ஜெபங்கள்]  மற்றும் பிற புனித பயிற்சிகளுக்கு தீங்கு விளைவிக்கும். மாறாக இந்த கோட்ப்பாட்டை   சந்தேகிப்பது பாராட்டத்தக்கது.இந்த  போதகர்கள் (ஆசிரியர்கள்) தெய்வீக கிருபையின் சக்தியையும் (வல்லமையும்), விசுவாசிக்குள் தங்கியிருக்கும் பரிசுத்த ஆவியின் செயலையும் அறியவில்லை என்பதைக் காட்டுகிறார்கள்.அவர்கள் அப்போஸ்தலன் யோவானுக்கு முரண்படுகிறார்கள்,அவர் தனது முதல் நிருபத்தில் வெளிப்படையான சொற்களைக் கொண்டு இதற்கு மாறாக கற்பிக்கிறார், "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்."  I யோவான் 3:2-3. மேலும், பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் புனிதர்களின் முன்மாதிரியால் இவை முரண்படுகின்றன, அவர்கள் கடைசிவரை நிலை நிறுத்தல் மற்றும் இரட்சிப்பின் மீது உறுதியளிக்கப்பட்டிருந்தாலும், ஜெபங்களிலும் தெய்வபக்தியின் பிற பயிற்சிகளிலும் நிலையானவர்களை இருந்தார்கள்.

7

ஆலோசனை சபை (சீனாட்)  கீழ்வருகிற  கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக் குகிறது:

ஒரு காலத்திற்கு மாட்டும்  நம்புபவர்களின் விசுவாசமும் மற்றும்  நியாயப்படுத்துகிற விசுவாசமும்,  காப்பாற்றுகிற விசுவாசமும்  கால வரையறை  தவிர்த்து வேறுபடுவதில்லை.கிறிஸ்து

தாமே  மத்தேயு 13:20, லூக்கா 8:13 மற்றும் பிற இடங்களிலும், இந்த காலத்தைத் தவிர, ஒரு காலத்திற்கு மட்டுமே நம்பிக்கை கொண்டவர்களுக்கும் உண்மையான விசுவாசிகளுக்கும் இடையே மூன்று வேறுபாடுகள் உள்ளன என்பதை குறிப்பிடுகிறார்.முந்தியவர்கள் விதை கல்லில் தரையில் பெறுகிறார்கள் ஆனால் பிந்தையவர்கள் நல்ல நிலத்திலோ அல்லது இதயத்திலோ பெறுகிறார்கள்; முந்தியவர்கள் வேர் இல்லாமல் இருக்கிறார்கள் ஆனால் பிந்தையவர்களுக்கு உறுதியான வேர் உள்ளது; முந்தியவர்கள் பழம் இல்லாமல் இருக்கிறார்கள் ஆனால் பிந்தையவர்கள் தங்கள் பழங்களை பல்வேறு அளவுகளில், நிலையான மற்றும் உறுதியான தன்மையுடன் கொண்டு வருகிறார்கள் என்று இயேசு அறிவிக்கிறார்.

8

ஆலோசனை சபை (சீனாட்)  கீழ்வருகிற  கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:

மறுஜென்ம முழுக்கை  இழந்த ஒரு மனிதன், பல முறை கூட மீண்டும் பிறக்கக்கூடும் என்பது எள்ளிநகையாடத் தக்கது  அல்ல. இந்த கோட்பாட்டின் மூலம் இந்த போதகர்கள் (ஆசிரியர்கள்) நாம்  கடவுளின் என்றென்றைக்கும் நிற்கிறதும் வித்தினால் மறுபடியும் பிறக்கிறோம் என்பதை மற்றும் அப்போஸ்தலன் பேதுருவின் சாட்சியத்திற்கு மாறாக "அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" I பேதுரு1:23 மறுக்கிறார்கள்.

9

ஆலோசனை சபை (சீனாட்)  கீழ்வருகிற  கற்பிப்பவர்களின் பிழையை ஒதுக்குகிறது:

விசுவாசிகள் தவறாமல் விசுவாசத்தில் தொடர வேண்டும் என்று கிறிஸ்து எந்த இடத்திலும் ஜெபிக்கவில்லை. இந்த போதகர்கள் (ஆசிரியர்கள்) கிறிஸ்துவையே முரண்படுகிறார்கள்: "நானோ உன் (சீமோன்) விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்" (லூக்கா 22:32). கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்காக மட்டுமல்லாமல், தங்கள் வார்த்தையின் மூலம் விசுவாசிக்கிற அனைவருக்கும் ஜெபம் செய்ததாக சுவிசேஷகர்  யோவான் அறிவிக்கிறார்."பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்." மற்றும் "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்."  யோவான் 17:11,15,20.

முடிவுரை

பெல்ஜிக் தேவாலயங்களில் மறுக்கப்பட்ட ஐந்து கட்டுரைகள் தொடர்பான உண்மையான கோட்பாட்டின் தெளிவான, எளிமையான மற்றும் தனித்துவமான (நேர்மையான) அறிவிப்பு இதுவாகும். மேலும் பிழைகளை நிராகரித்தல் சில காலமாக அவைகளை (தேவாலயங்களை) தொந்தரவு செய்தன.இந்த கோட்பாடு, கடவுளுடைய வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டது மற்றும் சீர்திருத்த தேவாலயங்களின் (திருச்சபை) விசுவாச அறிக்கைகளுக்கு உடன்பட்டது என்று ஆலோசனை சபை (சீனாட்) தீர்மானிக்கிறது. எனவே, எல்லாம் உண்மை, நீதி மற்றும் அன்பிற்கு எதிராக, சிலர் முறையற்ற முறையில் மக்களிடையே கற்பிக்க விரும்புவதாக தெளிவாகத் தெரிகிறது.

"சீர்திருத்த தேவாலயங்களின் முன்குறித்தல் (தேர்ந்தெடுக்கப்படுதல்) என்கிற கோட்பாடு, மற்றும் அது தொடர்பான பாடங்கள், அதன் சரியான மனப்பான்மை மற்றும் போக்கினால் எல்லா பக்தி மற்றும் மதத்திலிருந்தும் மனிதர்களின் மனதை வழிவிலக செய்கிறது.இது மாம்சத்தினாலும் பிசாசினாலும் நிர்வகிக்கப்படும் ஓபியேட் (போதை) மற்றும் இது சாத்தானின் கோட்டையாகும். அங்கு அவன் அனைவருக்கும் காத்திருக்கிறான்; அதிலிருந்து அவன் பலரைக் காயப்படுத்துகிறார், மேலும் விரக்தி மற்றும் போலி பாதுகாப்பு ஆகிய இரண்டை ஈட்டிகளால் பலரை சாகும்படி தாக்குகிறான்.இது கடவுளை பாவத்தின் ஆசிரியராகவும், அநியாய காரராகவும், கொடுங்கோன்மை உள்ளவராகவும், பாசாங்குத்தன்மை உள்ளவராகவும் ஆக்குகிறது; இது ஸ்டோயிசம், மேனகீசம், லிபர்டினிசம், டர்க்கிசம் ஆகியவற்றின் புதிய வடிவத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.
இது மனிதர்களுக்கு மாமிச பாதுகாப்பை தருகிறது. ஏனென்றால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் இரட்சிப்பைத் தடுக்க எதுவுமில்லை என்று அவர்கள் நம்புகிறார்கள். எனவே அவர்கள் விரும்பியபடி வாழ முடியும்; ஆகையால், அவர்கள் மிகவும் கொடூரமான குற்றங்கள் செய்யும் போதும் அவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள்.தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் (மறுதலிக்கப்பட்டவர்கள்) பரிசுத்தவான்களின் எல்லா செயல்களையும் உண்மையிலேயே செய்தாலும், அவர்களின் கீழ்ப்படிதல் அவர்களின் இரட்சிப்புக்கு பங்களிக்காது. அதே கோட்பாடு இவ்வாறு கற்பிக்கிறது, கடவுள் தனது விருப்பம் மற்றும் தன்னிச்சையான செயலால், எந்தவொரு பாவத்தையும் பாராமல் மற்றும் கருத்தில் கொள்ளாமல், உலகின் மிகப் பெரிய பகுதியை நித்திய தண்டனைக்கு முன்னரே தீர்மானித்துள்ளார். இந்த நோக்கத்திற்காக அவர்களை உருவாக்கியுள்ளார்; எவ்வாறு தேர்தல் விசுவாசம் மற்றும் நற்செயல்களின் நீரூற்றும் மற்றும் காரணமும், அவ்வாறு மறுதலிப்பு அவநம்பிக்கை மற்றும் கடவுள் பக்தி அற்ற நிலைக்கு காரணமாகும்.விசுவாசிகளின் பல பிள்ளைகள் தங்கள் தாய்மார்களின் மார்பகங்களிலிருந்து எடுக்கப்பட்டு, குற்றமற்றவர்களாக, கொடுங்கோன்மையுடன் நரகத்தில் மூழ்கடிக்க படுகிறார்கள்; ஆகவே அவர்களுடைய ஞானஸ்நானமோ அல்லது அவர்களுடைய ஞானஸ்நானத்தில் திருச்சபையின் ஜெபமோ அவர்களுக்கு உதவ முடியாது.அதேபோல் ஒரே மாதிரியான பல விஷயங்களை கற்பித்ததாக

நாங்கள் குற்றம் சாட்டப்படுகிறோம். இவைகளை சீர்திருத்த தேவாலயங்கள் அங்கீகரிப்பதில்லை மட்டுமல்லாமல் தங்கள் முழு இருதயத்துடன் வெறுக்கின்றன. இந்த காரணத்திற்காக, டார்ட்ரெக்டின் இந்த ஆலோசனை சபை (சீனாட்) கர்த்தருடைய நாமத்தில், நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரை பக்தியுடன் கூப்பிடுகிற அனைவரையும் சீர்திருத்த தேவாலயங்களின் விசுவாசத்தை அதன்மீது குவித்த காலங்களிலிருந்து தீர்ப்பளிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறது. ஆலோசனை சபை (சீனாட்) பண்டைய மற்றும் நவீன ஆசிரியர்களிடையே ஒரு சிலரின் தனிப்பட்ட வெளிப்பாடுகளிலிருந்து (அறிக்கைகளிலிருந்து) தீர்ப்பளிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறது ஏனெனில் பெரும்பாலும் நேர்மையற்ற முறையில் மேற்கோள் காட்டப்படுகிறது , அல்லது சிதைக்கப்பட்ட, மற்றும் அவர்களின் நோக்கத்திற்கு மிகவும் அண்ணீய அர்த்தம் தரப்படுகிறது.மாறாக, சீர்திருத்த தேவாலயங்களின் பொதுவான விசுவாச அறிக்கைகளிலிருந்தும், உண்மையான கோட்பாட்டின் அறிவிப்பிலிருந்தும் இது அனைவரின் ஒருமித்த ஒப்புதலால் மற்றும் முழு சினோடில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் உறுதிப்பாடு. இதைக்கொண்டு தீர்ப்பளிக்குமாறு ஆலோசனை சபை (சீனாட்) அவர்களை கேட்டுக்கொள்கிறது.அதுமட்டுமல்லாமல், பல தேவாலயங்களின் பொதுவான விசுவாச அறிக்கைகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளித்ததற்காகவும், பலவீனமானவர்களின் மனசாட்சியைத் துன்பப்படுத்தியதற்காகவும், மற்றும் உண்மையிலேயே விசுவாசமுள்ள பலரின் சமூகத்தை சந்தேகிக்க உழைப்பதற்காகவும்.அவர்களுக்குக் காத்திருக்கும் கடவுளின் பயங்கரமான தீர்ப்பைக் கருத்தில் கொள்ளுமாறு ஆலோசனை சபை (சீனாட்) அவர்களை எச்சரிக்கிறது.இறுதியாக, இந்த ஆலோசனை சபை (சீனாட்) கிறிஸ்துவின் நற்செய்தியில் உள்ளிருக்கும் தங்கள் சகோதரர்கள் அனைவரையும், பல்கலைக்கழகங்களிலும் தேவாலயங்களிலும் இந்த கோட்பாட்டைக் கையாள்வதில் தங்கள் பக்தியுடனும் மத ரீதியாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. மேலும் தெய்வீக பெயரின் மகிமை, வாழ்க்கையின் பரிசுத்தம், கஷ்டத்தில் இருக்கும் ஆத்மாக்களின் ஆறுதல் ஆகியவற்றுக்காக அவர்கள் பேசுவதிலும் எழுதுவதிலும் தங்களை செலவு செய்ய வேண்டும். விசுவாசத்தின் ஒப்புமைக்கு ஏற்ப அவர்கள் வேதவசனத்துடன் சிந்திக்க வேண்டும், பேச வேண்டும்.இறுதியாக, அவர்கள் பரிசுத்த வேதாகமத்தின் உண்மையான அர்த்தத்தில் நமக்கு பரிந்துரைக்கப்பட்ட வரம்புகளை மீறும் அனைத்து சொற்றொடர்களிலிருந்தும் விலக வேண்டும்.மேலும் இது வெட்கமில்லாத சோஃபிஸ்டுகளுக்கு சீர்திருத்த தேவாலயங்களின் கோட்பாட்டை அவமதிக்கவோ அல்லது பொய்யாக குற்றம் சாட்டவோ சரியான சந்தர்ப்பத்தை அளிக்கக்கூடும்.

பிதாவின் வலது புறத்தில் அமர்ந்திருக்கும் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து, மனிதர்களுக்கு பரிசுகளை வழங்குவாராக, சத்தியத்தில் நம்மை பரிசுத்தப்படுத்துவாராக, தவறு செய்பவர்களை சத்தியத்திற்கு கொண்டு வருவாராக, உண்மையான கோட்பாட்டை பொய்யாகக் கூறுபவர்களின் வாயை மூடுவாராக மற்றும் அவருடைய பேச்சுகள் அனைத்தும் கடவுளின் மகிமைக்கும், அவற்றைக் கேட்பவர்களின்

மேம்பாட்டிற்கும் வழிவகுக்கும் வகையில், அவருடைய வார்த்தையின் உண்மையுள்ள ஊழியக்காரருக்கு ஞானம் மற்றும் விவேகத்தின் ஆவியை அருளுவாராக. ஆமென்.

இது எங்கள் நம்பிக்கை மற்றும் முடிவு என்று எங்கள் பெயர்களை பதிவு செய்வதன் மூலம் நாங்கள் சான்றளிக்கிறோம்.

ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி மற்றும் சீனாட் செயலாளர்கள் மற்றும் டச்சு தேவாலயங்களில் இறையியல் பேராசிரியர்களின் பெயர்கள் மட்டுமல்லாமல், சினாடிற்கு நியமிக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களின் பெயர்களும், அந்தந்த தேவாலயங்களின் பிரதிநிதிகளாக இங்கே உள்ளன. கிரேட் பிரிட்டனில் இருந்து வந்த பிரதிநிதிகள், தேர்தல் பலட்டினேட், ஹெசியா, சுவிட்சர்லாந்து, வெட்டெராவ், ஜெனீவா குடியரசு மற்றும் தேவாலயம், ப்ரெமன் குடியரசு மற்றும் தேவாலயம், எம்டன் குடியரசு மற்றும் தேவாலயம் , கெல்டர்லேண்ட் மற்றும் ஜுட்பனின் டச்சி, தெற்கு ஹாலந்து , வடக்கு ஹாலந்து, ஜீலாந்து, உட்ரெக்ட் மாகாணம், ப்ரைஸ்லேண்ட், திரான்சில்வேனியா, க்ரோனிங்கன் மற்றும் ஓம்லாந்து மாநிலம், ட்ரெண்ட், பிரஞ்சு தேவாலயங்கள்